
# தின பூமி

thinaboomi.com

பூமி: 31 சுற்று: 290 புரட்டாசி 07

Regd. No.TRY/050/2023-2025 RNI Regn. No.61511/94

திருச்சி, செவ்வாய், செப்டம்பர் 23, 2025 ‣ சென்னை ‣ மதுரை ‣ திருச்சி ‣ கோவை ‣ நெல்லை ‣ சேலம் ‣ வேலூர் ‣ புதுச்சேரி பக்கம் 8 ₹ 3.00

**லெபனானில் இஸ்ரேல் திடீர் டிரோன் தாக்குதல்: அமெரிக்க குடிமக்கள் உள்பட 5 பேர் பலி**

....2-ம் பக்கம்

**ஜி.எஸ்.டி. சீர்திருத்தம் மூலம் நடுத்தர மக்களின் சேமிப்பு மேலும் உயரும்: அமித்ஷா**

...3-ம் பக்கம்

**பாகிஸ்தானுக்கு எதிரான வெற்றி: சூப்பர் 4 சுற்று புள்ளி பட்டியலில் முதலிடத்தை பிடித்தது இந்தியா**

....6-ம் பக்கம்





● சென்னை கலைவாணர் அரங்கத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அரசு செவிலியர் பயிற்சி பள்ளியில் பயின்றவர்களுக்கு 1,231 கிராம சுகாதார செவிலியர் பணியிடங்களுக்கு நேரடி நியமனம் மூலம் தெரிவு செய்யப்பட்டு அதற்கான பணி நியமன ஆணைகளை நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி வாழ்த்தினார். இதில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, முதன்மைச்செயலாளர் ப.செந்தில்குமார், இயக்குநர்கள் அருண் தம்புராஜ், எ.சோமசுந்தரம், சித்ரா, அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில்

# 1,231 செவிலியர்களுக்கு பணி நியமன ஆணைகள்

*** முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி - வாழ்த்து**
*** 2,417 காலிப்பணியிடங்கள் நிரப்படும் என உறுதி**

சென்னை, செப். 23-

**சென்னை, கலைவாணர் அரங்கத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அரசு செவிலியர் பயிற்சி பள்ளியில் பயின்றவர்களுக்கு, 1231 கிராம சுகாதார செவிலியர் பணியிடங்களுக்கு நேரடி நியமனம் மூலம் தெரிவு செய்யப்பட்டு அதற்கான பணி நியமன ஆணைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.**

#### நேரடி நியமனம் மூலம்

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று (22.9.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அரசு செவிலியர் பயிற்சி பள்ளியில் பயின்றவர்களுக்கு, 1231 கிராம சுகாதார செவிலியர் பணியிடங்களுக்கு நேரடி நியமனம் மூலம் தெரிவு செய்யப்பட்டு அதற்கான பணி நியமன ஆணைகளை வழங்கி, வாழ்த்தினார்.

#### கிராமப்புறங்களில்...

தமிழ்நாடு முழுவதும் கிராமப்புறங்களில் 5000 மக்கள் தொகைக்கு 1 துணை சுகாதார நிலையம் மற்றும் நகர்புறங்களில் 10,000 மக்கள் தொகைக்கு 1 துணை சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் இயங்கி வருகின்றது. 2025-ம் ஆண்டில் மக்கள் தொகைக்கேற்ப மேலும் 642 துணை சுகாதார நிலையங்கள், கிராமம் மற்றும் நகர்புறத்தில் புதிதாக உருவாக்கப்பட்டு தற்போது கிராமப்புறங்களில் 8713 துணை சுகாதார நிலையங்களும், நகர்புறங்களில் பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட்ட 2368 துணை சுகாதார நிலையங்களும் இயங்கி வருகிறது.

#### பல்வேறு திட்ட பணிகள்

கிராமப்புற சுகாதார நிலையங்களில் கிராம சுகாதார செவிலியர்களும், ஆரம்ப சுகாதார நிலையங்களில் துணை செவிலியர்களும் பணிபுரிந்து வருகிறார்கள். கிராம சுகாதார செவிலியர்கள் - தாய் சேய் நலப் பணி, தடுப்பூசி பணி, குடும்ப நல திட்டப் பணிகள், கருத்தடையை ஊக்குவித்தல், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம், வளர் இனம் பெண்களுக்கு சானிடரி நாப்கின்கள் வழங்குதல், ரத்தசோகை தடுப்பு மாத்திரை வழங்குதல், பள்ளி சிறார்களுக்கு தடுப்பூசி செலுத்தும் பணி, கிராமபுறங்களில் சிறுசிறு நோய்களான வயிற்றுப்போக்கு, சுவாச தொற்று நோய்களுக்கு சிகிச்சை அளித்தல், குடும்ப பதிவேடு பராமரித்தல் போன்ற பணிகளை மேற்கொள்வர்.

துணை செவிலியர்கள்- ஆரம்ப சுகாதார நிலையங்களில் வெளிப்புற நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்தல், பிரசவம் பார்த்தல், தடுப்பூசி பணிகள், தாய் சேய் நல பரிசோதனை, குழந்தைகளுக்கான சிறு நோய்களுக்கு சிகிச்சை மற்றும் முதலுதவி அளித்தல், ரத்த அழுத்த பரிசோதனை போன்ற பணிகளை மேற்கொள்வர். சுப்ரீம் கோர்ட்வழக்கில் தடையாணை காரணமாக துணை சுகாதார நிலையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலியாக இருந்த கிராம சுகாதார செவிலியர்கள் மற்றும் துணை செவிலியர்கள் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை.

#### விரைவில் நிரப்பிட....

முக்கியத்துவம் வாய்ந்த பணிகளை மேற்கொள்ளும் கிராம சுகாதார செவிலியர்கள் மற்றும் துணை செவிலியர்களின் காலிப் பணியிடங்களை நிரப்பிட அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, தற்பொழுது சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின் வழிகாட்டுதலின்படி, அரசு செவிலியர் பயிற்சி பள்ளியில் 25.07.2023 முன்னர் பயிற்சியில் தேர்ச்சி பெற்ற 1231 மாணவர்களுக்கு வெளிப்படையான முறையில் மாவட்டங்களில் இருந்த காலிப்பணியிடங்களை தேர்வு செய்யும் வகையில் கலந்தாய்வு நடத்தப்பட்டு, தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மேலும், மீதமுள்ள 2417 காலிப்பணியிடங்கள் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் விரைவில் நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

#### முதல்வருக்கு நன்றி...

தமிழ்நாடு அரசு டாக்டர்கள் சங்கம், தமிழ்நாடு மருத்துவ அலுவலர்கள் சங்கம், நர்சுகள் பொதுநல சங்கம், தமிழ்நாடு அரசு கிராமப் பகுதி சமுதாய சுகாதார செவிலியர் சங்கம் ஆகிய சங்கங்களின் சார்பில் அதன் நிர்வாகிகள் சந்தித்து, கிராம சுகாதார செவிலியர் பணியிடங்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கியமைக்காக தமிழ்நாடு முதல்வருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

### ஒரே நாளில் ரூ.1,120 உயர்ந்து புதிய உச்சம்:

# ஒரு சவரன் தங்கம் விலை ரூ.83 ஆயிரத்தை கடந்தது

சென்னை, செப். 23-

**தங்கம் விலை நேற்று (செப்.22) ஒரே நாளில் இருமுறை உயர்ந்து, புதிய உச்சமாக ஒரு பவுன் ரூ.83,440-க்கு விற்பனையானது.**

சர்வதேச பொருளாதார சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் இந்திய பொருட்களுக்கு 50 சதவீதம் வரிவிதிப்பு, அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு சரிவு உள்ளிட்ட காரணங்களால், தங்கம் விலை அதிரடியாக உயர்ந்து வருகிறது.

அந்த வகையில் தங்கம் விலை நேற்று (திங்கள்கிழமை) காலை வரலாறு காணாத உச்சத்தை எட்டி விற்பனையானது. சென்னையில் காலை நிலவரப்படி 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.70 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.10,360-க்கும், பவுனுக்கு ரூ.560 என உயர்ந்து ஒரு பவுன் தங்கம் ரூ.82,880-க்கும் விற்பனை ஆனது.

இந்நிலையில் நேற்று பிற்பகல் நிலவரப்படி, 22 காரட் ஆபரணத் தங்கம் விலை கிராமுக்கு மீண்டும் கிராமுக்கு ரூ.70 உயர்ந்து ஒரு கிராம் ரூ.10,430-க்கும், பவுனுக்கு ரூ.560 உயர்ந்து ஒரு பவுன் ரூ.83,440-க்கும் விற்பனையானது. ஒரே நாளில் இரண்டு முறை உயர்வு என பவுனுக்கு ரூ.1,120 உயர்ந்து அதிரடி காட்டியுள்ளது.

வெள்ளி விலையில் எந்த மாற்றமும் இல்லை என்பது சற்றே ஆறுதலான விஷயம். வெள்ளி விலை நேற்று கிராம் ஒன்றுக்கு ரூ.3 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.148-க்கு விற்பனையானது. கட்டி வெள்ளி கிலோவுக்கு ரூ.3,000 உயர்ந்து, ரூ.1,48,000-க்கு விற்பனையானது.

நேற்று நவராத்திரி பண்டிகையின் முதல் நாள், வரும் தீபாவளி வரையிலும் இந்தியாவில் பண்டிகைகளுக்குப் பஞ்சமில்லை. தீபாவளி முடிந்ததுமே திருமண முகூர்த்த காலம் தொடங்கும். வழக்கமாகவே பண்டிகை, சுபமுகூர்த்த காலங்களில் தங்கம் விலை சற்றே உயர்வதுண்டு. இந்த ஆண்டு ஏற்கெனவே பல மடங்கு உயர்ந்துவிட்ட நிலையில் பண்டிகை காலத்தின் முதல் நாளிலேயே தங்கம் விலை அதிரடி காட்டியுள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் ஒரு பவுன் தங்க நகை செய்கூலி, சேதாரம் இல்லாமலேயே ரூ.1 லட்சத்தை தொட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று நகை வியாபாரிகள் தரப்பில் கூறப்படுகிறது.

# அருணாச்சலில் ரூ.5,100 கோடியில் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள்

### பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்

இடா நகர், செப். 23-

**அருணாச்சலில் ரூ. 5,100 கோடியில் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.**

அருணாசல பிரதேச மாநிலத்தில் பிரதமர் மோடி நேற்று சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அங்கு ரூ.5,100 கோடி மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்டங்களை தொடங்கி வைத்தார். பிறகு பிரதமர் மோடி பேசியதாவது:

சூரிய கதிர்கள் முதலில் அருணாசல பிரதேசத்திற்கு வந்தாலும் வளர்ச்சியின் கதிர்கள் வர தசாப்தங்கள் ஆனது. காங்கிரஸ் கட்சியின் சிந்தனை முழு வடகிழக்கு பகுதிக்கும் தீங்கு விளைவித்தது.

அதனால், வளர்ச்சி பின் தங்கியது. பிரதமரான பின் 70 முறை வடகிழக்கு மாநிலங்களுக்கு சென்றுள்ளேன். அருணாசல பிரதேசம் சூரியன் உதிக்கும் பூமி மட்டுமல்ல. தேச பக்தி எழுச்சியின் பூமியும் கூட; மூவர்ணக்கொடியின் முதல் நிறம் காவியில் இருப்பது போல் அருணாசல பிரதேசத்தின் முதல் நிறமும் காவிதான். அருணாசல பிரதேசத்தின் மக்கள் துணிச்சல் மற்றும் அமைதியின் சின்னம்" என்றார்.

### காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின்

# 44-வது கூட்டம் டெல்லியில் வரும் 26-ம் தேதி நடக்கிறது

புதுடெல்லி, செப். 23-

**டெல்லியில் வரும் 26-ம் தேதி காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 44-வது கூட்டம் நடைபெறவுள்ள நிலையில், அதில் தமிழ்நாடு உள்ளிட்ட 4 மாநிலங்களை சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர்.**

தமிழ்நாடு, கர்நாடகம் இடையேயான காவிரி நதிநீர் பங்கீட்டு பிரச்னையை கண்காணிப்பதற்காக காவிரி மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி முறைப்படுத்தும் குழுவை அமைத்து சுப்ரீம் கோர்ட்டு கடந்த 2018-ம் ஆண்டு தீர்ப்பு வழங்கியது. இந்த இரண்டு அமைப்புகளும் அவ்வப்போது கூடி பல்வேறு முடிவுகளை எடுத்து வருகின்றன. காவிரி நீர் மேலாண்மை ஆணையம் இதுவரை 43 முறை கூடியுள்ளது. இந்நிலையில், காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 44-வது கூட்டம், வரும் 26-ந்தேதி வெள்ளிக்கிழமை) பிற்பகல் 2.30 மணிக்கு அதன் தலைவர் எஸ்.கே ஹல்தார் தலைமையில் டெல்லி பிகாஜி காமா பிளேசில் உள்ள எம்.டி.என்.எல் கட்டிடத்தில் நடைபெற உள்ளது. இது தொடர்பாக தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் மற்றும் புதுச்சேரி மாநிலங்களுக்கு காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் செயலர் டி.டி. சர்மா தகவல் அனுப்பியுள்ளார்.

# வங்கக்கடல் பகுதியில் புதிய புயல் சின்னம்

சென்னை, செப். 23-

**வங்கக்கடல் பகுதியில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி உள்ளது. மேலும் அடுத்த காற்றழுத்த தாழ்வு பகுதி 25ம் தேதி உருவாக வாய்ப்பு உள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் சில பகுதிகளில் மழைக்கு வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது.**

இதுகுறித்து இந்திய வானிலை மையம் வெளியிட்டுள்ள தகவலின்படி, வங்கக்கடல் பகுதியில் நேற்று காலை 5.30 மணிக்கு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி உள்ளது. நேற்று உருவான காற்றழுத்த தாழ்வு பகுதி மேற்கு-வடமேற்கு வங்கக்கடலை நோக்கி நகர வாய்ப்பு அருப்பதாக தெரிவித்துள்ளது. மேலும், மத்திய கிழக்கு, அதனை ஒட்டிய வடக்கு வங்கக்கடலில் வருகிற 25-ந்தேதி ஒரு புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் வரும் செப்.24 வரை இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. இன்று முதல் செப்.24-ஆம் தேதி வரை தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. சென்னை மற்றும் புகர் பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிராம உதவியாளர் தேர்வில் அனைத்து பிரிவினருக்கு வயது வரம்பு அதிகரிப்பு

### தமிழ்நாடு அரசு புதிய உத்தரவு

சென்னை, செப். 23-

**கிராம உதவியாளர்கள் தேர்வில், அனைத்து பிரிவினருக்கும், தலா 2 ஆண்டுகள் கூடுதல் வயது வரம்பு தளர்வு வழங்கப்பட்டுள்ளது.**

கிராம உதவியாளர் காலிப் பணியிடங்களுக்கு இம்மாதம் நேர்காணல் நடைபெற இருந்தது. இந்த நேர்காணல் அரசிடமிருந்து வயது நிர்ணயம் செய்வது தொடர்பான புதிய அறிவுரைகள் பெறப்பட்டுள்ள காரணங்களுக்காக, தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மீண்டும் திருத்தப்பட்ட வயது வரம்பு நிர்ணயம் செய்து, பணி நியமனம் தொடர்பான நடைமுறைகள் விவரம் பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று பணிக்கான வயது வரம்பை உயர்த்தி தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி, பொதுப் பிரிவினருக்கான வயது 32, பி.சி., எம்.பி.சி., டி.என்.சி. பிரிவினருக்கான வயது 39 ஆகவும், எஸ்.சி., எஸ்.டி. மற்றும் ஆதரவற்ற விதவைகளுக்கான வயது வரம்பு 42 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

கொரோனா காலத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு அடிப்படையில், கிராம உதவியாளர்கள் தேர்வில், அனைத்து பிரிவினருக்கும், தலா 2 ஆண்டுகள் கூடுதல் வயது வரம்பு தளர்வு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பான உத்தரவை வருவாய் துறை செயலாளர் அமுதா பிறப்பித்துள்ளார்.

### அரசியல் தலைவர்கள் பரிந்துரை செய்யும்

# பூத் ஏஜெண்டுகள் நியமனத்தில் புதிய நடைமுறையை பின்பற்ற வேண்டும்

### தலைமை தேர்தல் ஆணையம் உத்தரவு

புதுடெல்லி, செப். 23-

**அரசியல் தலைவர்கள் பரிந்துரைக்கும் பூத் ஏஜெண்டுகள் நியமனத்தில் இனி புதிய நடைமுறையை பின்பற்ற தலைமை தேர்தல் ஆணையம் புதிய உத்தரவை பிறப்பித்துள்ளது.**

நாடு முழுவதும் வாக்காளர் பட்டியல்களில் பெயர்கள் சேர்ப்பது, நீக்குவது, திருத்தங்கள் செய்வதற்கு ஒவ்வொருவரும் நேரடியாக விண்ணப்பித்து செய்ய முடியும். இது தவிர அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் பூத் ஏஜெண்டுகளை (பி.எல்.ஏ.2) நியமிக்கலாம். பூத் ஏஜெண்டுகளாக யாரை நியமிக்க வேண்டுமோ அவர்களை தேர்தல் ஆணையத்துக்கு கட்சி தலைவர்கள் பரிந்துரைக்க வேண்டும்.

தேர்தல் அதிகாரிகளுடன் நேரடி தொடர்பில் செயல்படும் அவர்கள் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பது, நீக்குவது. திருத்தங்கள் மேற்கொள்வது பற்றி உரிய ஆவணங்களுடன் நேரடியாக தேர்தல் ஆணையத்துக்கு விண்ணப்பிக்க முடியும். அதை தேர்தல் ஆணையமும் ஏற்றுக் கொள்ளும்.

வாக்கு திருட்டுக்கள் இந்த மட்டத்தில் இருந்து தான் தொடங்குவதாக ராகுல் காந்தி குற்றம் சாட்டி வருகிறார். இந்த விவகாரத்தில் தேர்தல் ஆணையமும் ஆளும் பா.ஜனதாவுககு உடந்தையாக செயல்படுவதாக குற்றம் சாட்டி வருகிறார். இந்த குற்றச்சாட்டை ஆதாரமற்றவை என்று தேர்தல் ஆணையம் நிராகரித்து விட்டது. அதே நேரம் தேர்தல் ஆணைய நடைமுறையில் பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகிறது.

அதன்படி தலைவர்கள் பரிந்துரைக்கும் பூத் ஏஜெண்டுகள் நியமனத்தில் புதுவிதியை கொண்டு வந்து உள்ளது. முன்பெல்லாம் வாக்குச்சாவடி ஏஜெண்ட் பெயரை மட்டும் தேர்தல் ஆணையத்துக்கு தெரிவிப்பார்கள். ஆனால் இனி விண்ணப்பபடிவத்தில் சம்பந்தப்பட்ட பூத் ஏஜெண்டின் பெயர், அந்த வாக்குச்சாவடி வாக்காளர் பட்டியலில் அவரது பெயர் இடம் பெற்று இருப்பதற்கான ஆதாரம், முகவரி, செல்போன் எண் ஆகியவற்றுடன் புகைப்படத்தையும் ஒட்டி அனுப்ப வேண்டும் என்று அனைத்து கட்சிக்களுக்கும் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாட்டை பொறுத்தவரை 68 ஆயிரம் வாக்குச்சாவடிகள் உள்ளன. ஒரு வாக்குச்சாவடிக்கு ஒருவர் வீதம் 68 ஆயிரம் ஏஜெண்டுகளை அரசியல் கட்சிகள் தேர்வு செய்து நியமிக்க வேண்டும். இதற்கான வேலைகளில் கட்சிகள் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| -466.26 | -124.70 |
| பாயின்ட் 82,159.97 | பாயின்ட் 25,202.35 |

| தங்கம் | வெள்ளி | டாலர் | பெட்ரோல் |
|---|---|---|---|
| 1 சவரன் ₹83,440 | 1 கிலோ ₹148,000 | ₹88.30 | ₹100.75 |
| 1 கிராம் ₹10,430 | 1 கிராம் ₹148.00 | | டீசல் ₹92.34 |

## இஸ்ரேல் திடீர் டிரோன் தாக்குதல்:
# லெபனானில் 5 பேர் பலி

**பெய்ரூட், செப். 23-**



லெபனானில் இஸ்ரேலின் டிரோன் தாக்குதலில் அமெரிக்க குடிமக்களான 3 குழந்தைகள் மற்றும் அவர்களுடைய தந்தை பலி ஆனார்கள்.

கடந்த ஆண்டு நவம்பரில் அமெரிக்கா தலைமையில், லெபனான் மற்றும் இஸ்ரேல் இடையே போர்நிறுத்த ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இந்த சூழலில், லெபனான் நாட்டின் தெற்கே பின்ட் பெய்ல் நகர் மீது இஸ்ரேலின் ஆளில்லா விமானங்கள் நள்ளிரவு தொடங்கி கடுமையான தாக்குதலை நடத்தி உள்ளன. போர்நிறுத்த ஒப்பந்தம் அமலில் உள்ள நிலையில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளது. இதுபற்றி லெபனானின் என்.என்.ஏ. என்ற அரசு ஊடகம் வெளியிட்ட செய்தியில், டிரோன் தாக்குதலில் மோட்டார் சைக்கிள், வாகனம் ஒன்றும் சேதமடைந்தது. 2 பேர் காயமடைந்தனர் என தெரிவித்து உள்ளது.

இதில், 3 குழந்தைகள் உள்பட 5 பேர் பலி ஆனார்கள். அவர்கள் செலின், ஹதி மற்றும் அசீல் என அடையாளம் காணப்பட்டு உள்ளது. அவர்களும், அவர்களுடைய தந்தையும் அமெரிக்க குடிமக்கள் ஆவர். இந்த தாக்குதலில், அவர்களுடைய தாயார் காயமடைந்து உள்ளார். அந்நாட்டின் சபாநாயகர் நபி பெர்ரி இதனை உறுதி செய்துள்ளார். ஆனால், இஸ்ரேல் வெளியிட்ட செய்தியில், பொதுமக்களின் உயிரிழப்புகள் ஏற்பட்டபோதும், ஹிஸ்புல்லா அமைப்பின் உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டு உள்ளார் என தெரிவித்தது.

# பாகிஸ்தானில் குண்டு வெடிப்பு; 24 பேர் பலி

**லாகூர், செப். 23-**

பாகிஸ்தானில் குண்டு வெடித்ததில் 24 பேர் உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தான் நாட்டில் பல்வேறு பயங்கரவாத அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. இந்த பயங்கரவாத அமைப்புகள் பாதுகாப்புப்படையினர், பொதுமக்கள் மீது அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்த அமைப்புகளை ஒழிக்கும் நடவடிக்கையில் பாதுகாப்புப்படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், பாகிஸ்தானின் கைபர் பக்துவா மாகாணம் கைபர் மாவட்டம் திராக் பள்ளத்தாக்கு பகுதியில் நேற்று குண்டு வெடிப்பு சம்பவம் அங்கேறியது. இந்த குண்டு வெடிப்பில் பெண்கள், குழந்தைகள் உள்பட 24 பேர் உயிரிழந்தனர். அதேவேளை, இந்த குண்டு வெடிப்பு சம்பவம் பாகிஸ்தானி தலிபான் பயங்கரவாத அமைப்பு செயல்பட்டு வரும் கட்டிடம் அருகே நடைபெற்றதாகவும், இதில் 14 பயங்கரவாதிகள் உயிரிழந்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது. அதேவேளை, குண்டு வெடிப்பு தாக்குதலை நடத்தியது யார்? என்ற தகவல் இதுவரை வெளியாகவில்லை.

## 3.2 ரிக்டர் அளவில்
# அருணாச்சலில் நிலநடுக்கம்

**இடாநகர், செப். 23-**

3.2 ரிக்டர் அளவில் அருணாச்சல பிரதேசத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

அருணாச்சல பிரதேசத்தின் மேல் சியாங் பகுதியில் நேற்று காலை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. அதிகாலை 3.01 மணியளவில் ரிக்டர் அளவில் 3.2 ஆக நிலநடுக்கம் ஏற்பட்டதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. 10 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 29.06 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 94.45 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் உடனடியாக வெளியாகவில்லை.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், நடிகவேள் எம்.ஆர்.ராதா மனைவி கீதா ராதா இயற்கை எய்தியதையொட்டி, சென்னையிலுள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று, உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, அவரது மகள் ராதிகா சரத்குமார் உள்ளிட்ட குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சரத்குமார் ஆகியோர் உள்ளனர்.

## இளம்பெண்ணிடம் பாலியல் அத்துமீறல்:
# சிங்கப்பூரில் இந்தியருக்கு 4 ஆண்டு சிறை

**சிங்கப்பூர், செப். 23-**

சிங்கப்பூரில் இளம் பெண்ணிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்ட இந்தியருக்கு சாட்டையடி தண்டனையும் 4 ஆண்டுகள் சிறை தண்டனையும் வழங்கப்பட்டது.

சிங்கப்பூரில் இளம் பெண் ஒருவரிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்ட இந்தியர் ஒருவருக்கு, 4 ஆண்டுகள் சிறை தண்டனையும், அந்நாட்டு சட்டப்படி 6 சாட்டையடிகளும் வழங்கி கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. சிங்கப்பூரில் உள்ள சாங்கி சிட்டி பாயிண்ட் வணிக வளாகத்தில், கடந்த 2023-ம் ஆண்டு மார்ச் 1-ந் தேதி நடந்த பாலியல் அத்துமீறல் சம்பவம் தொடர்பான புகாரில் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவை சேர்ந்த அங்கித் சர்மா(வயது 46) என்ற நபர், சிங்கப்பூரில் நிரந்தர குடியுரிமை பெற்றுள்ளார். இவர் பணி நிமித்தமாக 31 வயது பெண் ஒருவரை வணிக வளாகத்தில் உள்ள பாரில் சந்தித்து பேசியுள்ளார். முதலில் வேலை தொடர்பான உரையாடல்கள் நடந்த நிலையில், சிறிது நேரம் கழித்து அங்கித் சர்மா அந்த பெண்ணிடம் பாலியல் ரீதியாக ஆபாசமான முறையில் பேசத் தொடங்கியுள்ளார்.

இதனால் தர்மசங்கடத்திற்கு உள்ளான அந்த பெண், கழிவறைக்கு சென்று வருவதாக கூறி அங்கிருந்து எழுந்து சென்றுள்ளார். ஆனால் கழிவறை வாசல் வரை அந்த பெண்ணை விடாமல் பின் தொடர்ந்து சென்ற அங்கித் சர்மா, அருகில் உள்ள தாய்மார்கள் பாலூட்டும் அறைக்கு அந்த பெண்ணை வலுக்கட்டாயமாக இழுத்துச் சென்று, பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டுள்ளார்.

பின்னர் ஒருவழியாக அங்கிருந்து தப்பிச் சென்ற இளம்பெண், இது குறித்து போலீசில் புகார் அளித்தார். இந்த புகாரின் அடிப்படையில் அங்கித் சர்மாவை கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்த வழக்கு கோர்ட்டில் விசாரணைக்கு வந்த போது, தன் மீதான குற்றச்சாட்டுகளை அங்கித் சர்மா மறுத்தார். அந்த பெண்ணின் சம்மதத்துடனேயே அவரை நெருங்கிச் சென்றதாகவும், தாய்மார்கள் பாலூட்டும் அறைக்கு செல்ல அந்த பெண்தான் ஆலோசனை கூறியதாகவும் அங்கித் சர்மா தெரிவித்தார்.

இருப்பினும் அவரது தரப்பு வாதங்களை கோர்ட்டு நிராகரித்தது. அவருக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை வழங்க வேண்டும் என புகார்தாரர் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதனை 3 ஆண்டுகளாக குறைத்து வழங்க அங்கித் சர்மா தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார். இதையடுத்து அவருக்கு 4 ஆண்டுகள் சிறை தண்டனையும், 6 சாட்டையடிகளும் வழங்கி கோர்ட்டு உத்தரவிட்டது.

# திருச்செந்தூரில் திடீரென உள்வாங்கிய கடல்..!

**திருச்செந்தூர், செப். 23-**

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கும், அய்யா வைகுண்டர் அவதார பதிக்கும் இடைப்பட்ட கடல் பகுதியில் ஒவ்வொரு மாதமும் வழக்கமாக அமாவாசை மற்றும் பவுர்ணமி நாட்கள், அதற்கு முன்தினம், மறுநாள் கடல் நீர் உள்வாங்குவது வழக்கமாக நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், அமாவாசை தினமான நேற்று முன்தினம் திருச்செந்தூரில் கடல் நீர் உள்வாங்கி காணப்பட்டது. சுமார் 100 அடி தூரம் கடல் உள்வாங்கியது. இதனால் கடலில் பாசி படர்ந்த பாறைகள் வெளியே தெரிந்தன. எனினும், ஆபத்தை உணராமல் பாறைகள் மேல் நின்று பக்தர்கள் செல்பி எடுத்தனர். கடல் உள்வாங்கிய பகுதிகளில் காவல்துறையினர் மற்றும் கோவில் கடற்கரை பாதுகாப்பு பணியினர் அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்தனர்.

மேலும் கோவிலுக்கு வந்த பக்தர்கள் எந்த வித அச்சமும் இன்றி வழக்கம்போல் கடலில் புனித நீராடி சாமி தரிசனம் செய்தனர். திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் நேற்று முன்தினம் பக்தர்கள் கூட்டம் அதிகரித்து காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# எம்.ஆர்.ராதா மனைவி மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

**சென்னை, செப். 23-**

எம்.ஆர்.ராதா மனைவியும், ராதிகாவின் தாயாருமான கீதா ராதா உடல் நலக்குறைவால் காலமானார். இதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

மறைந்த நடிகவேள் எம்.ஆர்.ராதா மனைவியும், நடிகை ராதிகா-நிரோஷா ஆகியோரின் தாயாரும், நடிகர் சரத்குமார் அவர்களின் மாமியாருமான கீதா ராதா காலமானார். அவருக்கு வயது 86. வயது மூப்பு மற்றும் உடல்நலக் குறைவால் நேற்று முன்தினம் (21.09.25 ) மாலை அவர் காலமானார்.

இந்த நிலையில், எம்.ஆர்.ராதா மனைவி மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், "நடிகவேள் எம்.ஆர்.ராதா மனைவி கீதா ராதா மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது பிரிவால் வாடும் சகோதரி ராதிகா சரத்குமார் உள்ளிட்ட குடும்பத்தினருக்கும், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கைபர் பக்துன்வாவில் பாக். விமானப்படை குண்டுவீச்சு: 30 அப்பாவி மக்கள் உயிரிழப்பு


**இஸ்லாமாபாத்,செப். 23-**

பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையாக கைபர் பக்துன்வாவில் பாகிஸ்தான் விமானப்படை குண்டுவீசியதில் 30 பேர் உயிரிழந்துள்ளனர். கைபர் பக்துன்வா மாகாணத்தில் உள்ள ஒரு கிராமத்தில் பாகிஸ்தான் விமானப்படை 8 குண்டுகளை வீசித் தாக்கியதில், பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 30 பேர் உயிரிழந்தனர்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் பஷ்துன் மக்கள் பெரும்பான்மையாக உள்ள மாட்ரே தாரா கிராமத்தில், பாகிஸ்தான் விமானப்படை ஜேஎஃப்-17 போர் விமானங்கள் எல்எஸ்-6 வகையைச் சேர்ந்த 8 குண்டுகளை வீசித் தாக்கின. இந்த தாக்குதலால் கிராமத்தின் பெரும்பகுதி அழிக்கப்பட்டது, இதில் பலர் காயமடைந்தனர். பெண்கள், குழந்தைகள் உட்பட 30 பேர் உயிரிழந்தனர்.

விமானப்படை அப்பகுதியில் உள்ள தெஹ்ரீக்-இ-தலிபான் பாகிஸ்தான் மறைவிடங்களை குறிவைத்து தாக்கியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனால், இந்தத் தாக்குதலில் உயிரிழந்த அனைவரும் பொதுமக்கள் ஆவர். சமீபத்திய நாட்களில், ஆப்கானிஸ்தானின் எல்லையை ஒட்டியுள்ள கைபர் பக்துன்வா மாகாணத்தில் பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை பாகிஸ்தான் ராணுவம் தீவிரப்படுத்தியுள்ளது.

## 23-09-2025



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** எதிர்பாராத தன லாபங்கள் ஏற்படும். பெண்களுடன் புதிய சிநேகம் மலரும். அதன் காரணமாக இன்பமும், மன தெம்பும், மகிழ்ச்சியும் நிலவும். தொழில் ஆர்வத்தால் ஆதாயம் பெருகும்.

**ரிஷபம்:-** பணி மாற்றங்கள் ஏற்படலாம். தாயை அனுசரித்துச் செல்வது நல்லது. வங்கிக் கடன்களை செலுத்த கெடுபிடி செய்வார்கள். கால்நடைகளால் இழப்பு ஏற்படலாம்.

**மிதுனம்:-** அன்னையின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பெண்களால் இழப்பு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் பெருகும். தவணை முறையில் பொருட்கள் வாங்க நேரும்.

**கடகம்:-** வீரம் மிக்க செயல்கள் புரிவீர்கள். செயல்பாடுகளில் வெற்றி அடைவீர்கள். புகழ் பெறுவீர்கள். கோவில் மற்றும் தர்ம ஸ்தாபனங்களுக்கு உதவுவீர்கள். செல்வம் சேரும்.

**சிம்மம்:-** தொழில் மற்றும் வியாபாரத்தில் நிலையற்ற தன்மைகளே நிலவும். ஆதலால், மனக் கஷ்டம் அதிகமாகும். பண இழப்பை தவிர்க்க எச்சரிக்கையுடன் இருக்கவும். எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.

**கன்னி:-** மகிழ்ச்சி நிறைந்த நாளாக அமையும். விரும்பிய பொருட்களை வாங்குவீர்கள். அதிகாரம் மிக்க பதவி கிடைக்கும். வீட்டில் வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும்.

**துலாம்:-** வியாபாரம் மற்றும் தொழிலில் ஏற்படும் இழப்புக்கள் மூலம் வருமானம் குறையும். வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. புத்தி கூர்மை உள்ளவரானாலும் கல்வியில் தடைகள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:-** மகிழ்ச்சி மிக்க மணவாழ்க்கை, பெற்றோர்களால் ஆதாயம் ஆகியவை ஏற்படும். வீடு மற்றும் வாகனங்கள் வாங்குவீர்கள். விவசாய நிலங்களில் லாபம் ஏற்படும்.

**தனுசு:-** கல்வி நிலை உயரும். ஆரோக்கியம் பெருகும். தைரியம் கூடும். பயணம் செய்ய விரும்புவீர்கள். புதிய சூழ்நிலைகள் உருவாகும். பொதுச் சேவையில் ஈடுபடுவீர்கள்.

**மகரம்:-** பிறருக்கு நல்ல ஆலோசனைகளை வழங்குவீர்கள். நீந்தி மகிழ்வதில் மற்றும் இசை கேட்பதில் ஆர்வம் கூடும். கல்வியில் உயர்வு ஏற்படும். அழகிய மனைவி அமைவாள்.

**கும்பம்:-** நேர்மையாக நடக்க முயலுங்கள். கோபத்தால் குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்படலாம். மனைவியின் கலகத்தால், உறவுகள் பகையாகும். அக்கம் பக்கத்தினருடன் அளவாகப் பழகுங்கள்.

**மீனம்:-** இன்று, கூட்டாளி அல்லது மனைவி மாற்றங்களை விரும்புவார். திருமண காலம் கைகூடும். பொதுச் சேவையில் நாட்டம் ஏற்படும். சிறு பயணங்கள் ஏற்படலாம்.

# தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் டெல்லி பயணம்

**சென்னை, செப். 23-**

பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் திடீரென டெல்லிக்கு புறப்பட்டார்.

தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற உள்ளது. தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் அரசியல் களம் சூடுபிடித்துள்ளது. தி.மு.க., அ.தி.மு.க., பா.ஜ.க., காங்கிரஸ், தே.மு.தி.க., வி.சி.க., ம.தி.மு.க., பா.ம.க, த.வெ.க. உள்பட பல்வேறு கட்சிகள் தேர்தல் நடவடிக்கைகளை தொடங்கி விட்டன. சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க., பா.ஜ.க இடையே கூட்டணி அமைந்துள்ளது.

இந்த நிலையில், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை, பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் தமிழக மேலிட பார்வையாளர் அரவிந்த் மேனன், மாநில துணைத் தலைவர் கே.பி.ராமலிங்கம் ஆகியோர் சந்தித்து பேசினர். சுமார் அரை மணி நேரம் அரசியல் நிலவரம் குறித்தும், சட்டசபை தேர்தல் வியூகம், கூட்டணியில் யார் யாரை சேர்ப்பது? என்பது தொடர்பாகவும் எடப்பாடி பழனிசாமியுடன் பேசியதாக கூறப்படுகிறது. அதன்பிறகு எடப்பாடி பழனிசாமி, நயினார் நாகேந்திரன் ஆகியோர் மட்டும் சுமார் அரை மணி நேரம் தனியாக பேசினர். அப்போது, ஓ.பன்னீர்செல்வம், டி.டி.வி.தினகரன் ஆகிய இருவரையும் கூட்டணியில் சேர்ப்பது தொடர்பாக எடப்பாடி பழனிசாமியுடன் நயினார் நாகேந்திரன் ஆலோசனை நடத்தியதாகவும் சொல்லப்படுகிறது.

இந்த நிலையில், பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் நேற்று டெல்லி புறப்பட்டு சென்றார். அக்டோபரில் தொடங்க உள்ள தனது தேர்தல் சுற்றுப் பயணம் தொடர்பாக அமித்ஷா, ஜே.பி.நட்டா ஆகியோரை சந்தித்து ஆலோசனை நடத்த இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும் அ.தி.மு.க. ஒருங்கிணைப்பு குறித்தும் ஆலோசனை நடத்த உள்ளதாக சொல்லப்படுகிறது. நேற்று முன்தினம் எடப்பாடி பழனிசாமியுடன் பேசியது குறித்து பா.ஜ.க. தலைமையிடம் நயினார் நாகேந்திரன் தெரிவிப்பார் என்று கூறப்படுகிறது.

## சார்லி கிர்க் துக்க நிகழ்ச்சி:
# ட்ரம்ப் - எலான் மஸ்க் சந்திப்பு

**வாஷிங்டன், செப். 23-**

கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஏற்பட்ட கடுமையான வார்த்தை மோதல்களுக்குப் பிறகு, அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் மற்றும் டெஸ்லா தலைமை நிர்வாக அதிகாரி எலான் மஸ்க் ஆகியோர் வலதுசாரி செயற்பாட்டாளர் சார்லி கிர்க்கின் துக்க நிகழ்வில் சந்தித்தனர்.

அமெரிக்காவின் உடா பல்கலைக்கழகத்தில் நடந்த மாணவர்களுடனான கேள்வி பதில் நிகழ்ச்சியில் பங்கேற்றிருந்த வலதுசாரி செயற்பாட்டாளர் சார்லி கிர்க் (31) செப்டம்பர் 10 அன்று சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த நிலையில், அரிசோனாவின் க்ளென்டேலில் உள்ள ஸ்டேட் ஃபார்ம் மைதானத்தில் நடந்த வலதுசாரி ஆர்வலரான சார்லி கிர்க்கின் இறுதிச் சடங்கு நிகழ்ச்சிக்காக, அதிபர் ட்ரம்ப் மற்றும் டெஸ்டா தலைமை நிர்வாக அதிகாரி எலான் மஸ்க் ஆகியோர் அருகருகே அமர்ந்து சிறிது நேரம் பேசினர்.

முன்னதாக அதிபர் ட்ரம்ப் அறிமுகம் செய்த "பிக் பியூட்டிஃபுல் பில்" என்ற மசோதாவை எலான் மஸ்க் மிகக் கடுமையாக எதிர்த்தார். இதன் காரணமாக ட்ரம்ப் அரசின் பதவியில் இருந்து விலகிய அவர், அதிபர் ட்ரம்புக்கு எதிராக சமூக வலைதளங்களில் தொடர்ச்சியாக கருத்துகளையும் வெளியிட்டார். ட்ரம்ப்பும் எலான் மஸ்கை கடுமையாக விமர்சித்தார். புதிய கட்சியை தொடங்கப் போவதாகவும் மஸ்க் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# கல்வியில் சிறந்த தமிழ்நாடு விழா வரும் 25-ம் தேதி நடைபெறுகிறது
## அமுதா ஐ.ஏ.எஸ். தகவல்

**சென்னை, செப். 23-**

கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்ற தலைப்பில் 7 திட்டங்களை உள்ளடக்கி சிறப்பு நிகழ்ச்சி நடைபெறுமென அமுதா ஐ.ஏ.எஸ். தெரிவித்துள்ளார்.

சென்னையில் அரசு செய்தித்தொடர்பாளர் அமுதா ஐ.ஏ.எஸ். செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது;

கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்ற தலைப்பில், தமிழ்நாடு அரசு கல்வியில் செய்த சாதனைகள், சிறப்புகள் குறித்த மாபெரும் கொண்டாட்டம் நடைபெற உள்ளது. நான் முதல்வன், தமிழ் புதல்வன், புதுமைப் பெண் உள்ளிட்ட 7 திட்டங்களை உள்ளடக்கி இந்த சிறப்பு நிகழ்ச்சி நடைபெறும். சென்னை கலைவாணர் அரங்கில் வைத்து நடைபெறும் இந்த நிகழ்த்தியில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கிறார். மேலும், தெலங்கானா முதல் மந்திரி ரேவந்த் ரெட்டியும் இதில் கலந்துகொள்கிறார்.

நான் முதல்வன் திட்டத்தின் மூலம் 14.60 லட்சம் பேர் பயன் பெற்றுள்ளனர். புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் 5.29 லட்சம் பேர் பயனடைந்துள்ளனர்.

தமிழ்ப்புதல்வன் திட்டத்தில் மூலமும் லட்சக்கணக்கான மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர். கடந்த ஆண்டை விட ஒரு லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. இவ்வாறு அவர் பேசி வருகிறார்.

# அமெரிக்காவில் நிலநடுக்கம்

**வாஷிங்டன், செப். 23-**

அமெரிக்காவில் நிலநடுக்கம் ரிக்டர் அளவில் பதிவாகி உள்ளதாக அந்த நாட்டு தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ மாகாணத்தில் நேற்று அதிகாலை 3 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. பெர்க்லே நகரின் தென் கிழக்கு பகுதியில் நிலநடுக்கத்தின் மையம் அமைந்திருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நேற்று ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.3 ஆக பதிவாகி உள்ளது. அதிகாலை நேரம் என்பதால், நிலநடுக்கம் ஏற்பட்டபோது தூக்கத்தில் இருந்த பலர் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சமடைந்தனர். இந்த நிலநடுக்கத்தால் உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை என தகவல் வெளியாகியுள்ளது.

வாக்களிப்பது நமது கடமை

# கேரளாவில் அதிகரிக்கும் விவாகரத்து..!

**திருவனந்தபுரம்,செப். 23-**

கேரளாவில் விவாகரத்து கோருவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இன்றைய அவசர உலகில் குடும்ப வாழ்க்கையில் இருக்கும் இளம் தம்பதிகள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாமலும், விட்டு கொடுத்து வாழத் தெரியாமலும், சிறிய விஷயங்களுக்கு எல்லாம் கோபப்பட்டு, சண்டை போட்டுக் கொண்டு விவாகரத்து வாங்குவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். அதிலும் குறிப்பாக 30 வயதுக்கு உட்பட்டவர்கள் அதிகம் இந்த முடிவை எடுக்கின்றனர். சாதி, மதம், இனம் என்று வேறுபாடு இல்லாமல் அனைத்து தரப்பினரும் விவாகரத்தை தேடிச்செல்கின்றனர். சகிப்பு தன்மையும், புரிதலும் இல்லாததே இதற்கு காரணமாக பார்க்கப்படுகிறது.

இந்தநிலையில், கேரளாவில் திருமணம் செய்த குறுகிய காலத்திலேயே சட்டப்பூர்வ விவாகரத்து கோருவோரின் எண்ணிக்கை அதிகரிப்பதாக புள்ளி விபரங்கள் வெளியாகியுள்ளன. ஆண்டுக்கு சுமார் 1.10 லட்சம் திருமணங்கள் பதிவாகும் நிலையில், சுமார் 30,000 விவாகரத்து வழக்குகள் பதிவாகின்றன. இதில் கணிசமானோர், முந்தைய ஆண்டில் திருமணம் செய்தவர்கள் என ஆர்.டி.ஐ மூலம் பெறப்பட்ட தகவலில் தெரியவந்துள்ளது.

## சாத்தியமற்றதை சாத்தியமாக்குகிறார்:
# பிரதமர் மோடிக்கு துணை ஜனாதிபதி புகழாரம்

**புதுடெல்லி, செப். 23-**

சாத்தியமற்றதை பிரதமர் மோடி சாத்தியமாக்குவதாக துணை ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.


பிரதமரின் இரண்டு தொகுப்பு உரைகளை வெளியிடும் நிகழ்வில் அவர் கலந்துகொண்டு உரையாற்றியதாவது;

அமெரிக்கா இந்தியா மீது 50 சதவீத கடமையை சுமத்தியிருந்தாலும், டிரம்ப் எப்போதும் மோடியை எனது சிறந்த நண்பர் என்று கூறி வருகிறார். அந்த சூழ்நிலையிலும் கூட, நான் மோடிக்கு எதிரானவன் என்று அவர் சொல்லவில்லை. நான் மோடிக்கு ஆதரவாக இருக்கிறேன் என்று அவர் எப்போதும் சொல்லி வருகிறார். ரஷ்ய அதிபர் புதினின் நெருங்கிய நண்பராக பிரதமர் மோடி உள்ளார்.

இதேபோல், சர்வதேச அரசியலில் வேறுபாடுகள் இருந்தபோதிலும் பிரதமர் மோடியுடன் ஜி ஜின்பிங் நல்ல உறவைப் பகிர்ந்து கொள்கிறார். ஜி ஜின்பிங் மோடியின் நல்ல நண்பர். தற்போது நாம் காண்பது இதைத்தான். அதனால்தான் அவர் சாத்தியமற்றதை சாத்தியமாக்குகிறார். பிரதமர் தூய்மையான இதயத்துடன் மக்களுக்குச் சேவை செய்கிறார். பிரதிபலனாக எதையும் எதிர்பார்க்கவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## ஜி.எஸ்.டி. சீர்திருத்தம் மூலம்
# நடுத்தர மக்களின் சேமிப்பு மேலும் உயரும்: அமித்ஷா

**புதுடெல்லி, செப். 23-**



ஜி.எஸ்.டி. சீர்திருத்தம் மக்களின் செலவினங்களை மேலும் குறைக்கும் என்றும் நடுத்தர மக்களின் சேமிப்பு மேலும் உயரும் என்றும் மத்திய அமைச்சர் அமித்ஷா தெரிவித்துள்ளார்.

திருத்தப்பட்ட ஜி.எஸ்.டி விகிதங்கள் நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இதனால் மக்கள் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருட்கள், மின்சாதனங்கள், வாகனங்கள் உள்ளிட்ட பல பொருட்களின் விலைகள் குறைய உள்ளன. இந்த நிலையில், ஜி.எஸ்.டி. சீர்திருத்தம் அனைவரின் இல்லங்களிலும் மகிழ்ச்சி தரும் என மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது: அன்றாட அத்தியாவசியப் பொருட்கள், சுகாதாரப் பொருட்கள், மின்னணு சாதனங்கள் மற்றும் கல்விப் பொருட்களின் ஜி.எஸ்.டி. விகிதங்களில் ஏற்பட்டுள்ள முக்கியமான குறைப்பு, நடுத்தர மக்களின் வருமானத்தை அதிகரிக்கும். மேலும், இன்னும் அதிகமாக சேமிக்க அவர்களை ஊக்குவிக்கும். ஜி.எஸ்.டி சீர்திருத்தம் அனைவரின் இல்லங்களிலும் மகிழ்ச்சி தரும்.

ஏழைகள், இளைஞர்கள், விவசாயிகள் மற்றும் பெண்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற பிரதமர் நரேந்திர மோடியின் உறுதிக்கு ஜி.எஸ்.டி. சீர்திருத்தம் ஒரு சான்றாகும். புதிய சீர்திருத்தம், பல்வேறு வகையான பொருட்களின் மீதான ஜி.எஸ்.டி. வரியை குறைத்ததுடன், மக்களின் செலவினங்களை மேலும் குறைக்கும். மேலும் உலகின் மிகவும் வளமான நாடாக மாறும் பாதையில் இந்தியா இன்னும் வேகமாக செல்லும். ஏழைகள், விவசாயிகளுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற மோடியின் உறுதிக்கு அடுத்த தலைமுறை ஜி.எஸ்.டி. சீர்திருத்தங்கள் சான்றாகும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## விஜய் பிரசாரத்துக்கு கடும் நிபந்தனைகள்:
# ஐகோர்ட்டில் த.வெ.க. சார்பில் மேலும் ஒரு மனு தாக்கல்..!

**சென்னை, செப். 23-**

விஜய் பிரசாரத்துக்கு கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்படுவதாக த.வெ.க.வுக்கு ஆதரவாக ஐகோர்ட்டில் மேலும் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் சட்டசபை தேர்தல் அடுத்த ஆண்டு(2026) நடைபெற உள்ள நிலையில், தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய், தமிழகம் முழுவதும் பிரசார சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அதன்படி கடந்த 13-ந்தேதி த.வெ.க. தலைவர் விஜய் திருச்சியில் தேர்தல் பிரசாரத்தை தொடங்கினார். தொடர்ந்து டிசம்பர் மாதம் 20-ந் தேதி வரை மாநிலம் முழுவதும் பிரசாரம் மேற்கொள்ள உள்ளார்.

திருச்சி, நாகை உள்ளிட்ட மாவட்டங்களில் நடந்த த.வெ.க. பிரசாரத்தின்போது போலீஸ் தரப்பில் கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தன. இதனிடையே, விஜய்யின் பிரசாரத்திற்கு கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்படுவதாக த.வெ.க.வினர் குற்றம்சாட்டியுள்ளனர். விஜய்யின் பிரசாரத்துக்கு அனுமதி கோரி விண்ணப்பிக்கும் மனுக்களை பாரபட்சமின்றி பரிசீலித்து அனுமதி வழங்க காவல்துறைக்கு உத்தரவிட வேண்டும் என த.வெ.க. சார்பில் ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், த.வெ.க.வுக்கு ஆதரவாக சென்னை ஐகோர்ட்டில் மேலும் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. த.வெ.க.வின் வழக்கில், தங்களையும் சேர்க்கக்கோரி தேசிய மக்கள் சக்தி கட்சி சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க.வை விட த.வெ.க.விற்கு கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்படுவதாக அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.




**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமைச்செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாகத் தெரிவு செய்யப்பெற்ற 13 பேருக்கு தமிழ் வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார்.**

## சேலத்தில் குட்டையில் மூழ்கி
# உயிரிழந்த 2 பேர் குடும்பத்திற்கு தலா ரூ.3 லட்சம் நிவாரண நிதி
## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

**சேலம், செப். 23-**

சேலத்தில் குட்டையில் மூழ்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நிவாரணம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:- சேலம் மாவட்டம், சேலம் தெற்கு வட்டம், பைரோஜி அக்ரஹாரம் குரூப் கிராமத்தில் உள்ள அரசம்பாளையம் மலை அடிவாரத்தில் மழைநீர் தேங்கியுள்ள குட்டையில் குளித்துக் கொண்டிருந்த நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், மின்னக்கல் கிராமத்தில் வசிக்கும் சுப்பிரமணி என்பவரின் மகன்கள் நிஷாந்த் (வயது 23) மற்றும் பிரசாந்த் (வயது 19) ஆகிய இருவரும் எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். மேலும், இம்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்த இருவரின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய கடற்படைக்கு புதிய செயற்கைக்கோள்:
# அக். மாதம் விண்ணில் ஏவ இஸ்ரோ திட்டம்

**சென்னை, செப். 23-**

இந்திய கடற்படைக்கு புதிய தகவல் தொடர்பு செயற்கைக்கோளை அக்டோபர் மாதம் விண்ணில் ஏவ இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) 'மல்டி-பேண்ட்' ராணுவ தகவல் தொடர்பு செயற்கைக்கோளான 'ஜிசாட்-7' (ருக்மினி) உருவாக்கி விண்ணில் செலுத்தி வருகிறது. நாட்டின் கடற்படை நடவடிக்கைகளை கணிசமாக ஜிசாட்-7 என்னும் ருக்மினி செயற்கைக்கோள் மேம்படுத்தி வந்தது.

ருக்மினி செயற்கைக்கோள் இந்திய கடற்படைக்கு தகவல் தொடர்பு திறன்களை திறம்பட வழங்கி உள்ளது. இந்தநிலையில் புதிய ரக ஜிசாட்-7 ஆர் (சி.எம்.எஸ்-02) என்ற செயற்கைக்கோளை விண்ணுக்கு அனுப்ப இந்திய கடற்படை கடந்த 2019-ம் ஆண்டு ஜூன் 11-ந்தேதி இஸ்ரோவிடம் கேட்டுக்கொண்டது.

இதனை தற்போது இஸ்ரோ தயாரித்து சோதனைகளை முடித்து உள்ளது. இதனை எல்.வி.எம்-3 எம்-5 என்ற ராக்கெட் மூலம் அடுத்த மாதம் (அக்டோபர்) 2-வது வாரம் விண்ணில் ஏவுவதற்கு திட்டமிட்டு விஞ்ஞானிகள் தீவிரமாக பணியில் இறங்கி உள்ளனர் என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறினர்.

## கர்நாடகா மாநிலத்தில்
# சாதிவாரி கணக்கெடுப்பு தொடக்கம்

**பெங்களூரு, செப். 23-**

கர்நாடகத்தில் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு 2010-ம் ஆண்டு சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இது அறிவியல் பூர்வமாக நடத்தப்படவில்லை என்று கூறி பெரும்பான்மை சமூகங்களான லிங்காயத், ஒக்கலிக சமூகங்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. இதையடுத்து அந்த கணக்கெடுப்பு அறிக்கையை கைவிடுவதாக முதல்வர் சித்தராமையா அறிவித்தார். அதைத்தொடர்ந்து புதிதாக சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும் என்றும், அது செப்டம்பர் 22-ந் தேதி தொடங்கும் என்றும் சித்தராமையா அறிவித்தார்.

இந்த முறை புதிதாக 336 சாதிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டன. இதில் குறிப்பாக சுமார் 47 கிறிஸ்தவ துணை சாதிகள் சேர்க்கப்பட்டன. இதற்கு பா.ஜனதா உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. இந்த புதிய சாதிகளால் குழப்பம் ஏற்பட்டது. இதுகுறித்து மந்திரிசபை கூட்டத்தில் துணை முதல்வர் டி.கே.சிவக்குமார் உள்பட சில மந்திரிகளும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் இந்த கணக்கெடுப்பு நடைபெறுமா என்ற கேள்விக்குறி எழுந்தது.

இதற்கு விளக்கம் அளித்த முதல்வர் சித்தராமையா, குழப்பங்கள் தீர்க்கப்பட்டு திட்டமிட்டப்படி மக்கள்தொகை கணக்கெடுப்பு 22-ந் தேதி தொடங்கப்படும் என்று அறிவித்தார். அதன்படி கர்நாடகத்தில் நேற்று (திங்கட்கிழமை) சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு பணி தொடங்கியது. இந்த பணியில் 1.75 லட்சம் ஆசிரியர்கள் ஈடுபடுகிறார்கள். இந்த கணக்கெடுப்பு பணி 17 நாட்கள் அதாவது வருகிற அக்டோபர் 7-ந் தேதி வரை நடைபெற உள்ளது. இதில் சுமார் 7 கோடி பேரின் தகவல்கள் சேகரிக்கப்பட உள்ளன. கணக்கெடுப்பாளர்கள் வீடு வீடாக சென்று தகவல்களை சேகரிப்பார்கள். மக்கள் தங்களிடம் உள்ள ஆதார் கார்டு, வாக்காளர் அடையாள அட்டை, ரேஷன் கார்டு மற்றும் பள்ளி மதிப்பெண் சான்றிதழ் தயார் நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும்.

கணக்கெடுப்பாளர்கள் 60 கேள்விகளை கேட்டு விவரங்களை சேகரிக்க உள்ளனர்.

## தமிழக அரசியலில் பரபரப்பு:
# டி.டி.வி.தினகரன்-அண்ணாமலை திடீர் சந்திப்பு

**சென்னை, செப். 23-**



டி.டி.வி. தினகரனை பா.ஜ.க. மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை நேரில் சந்தித்து பேசினார். இந்நிகழ்வு தமிழக அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற உள்ளது. தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் அரசியல் களம் சூடுபிடித்துள்ளது. தி.மு.க., அ.தி.மு.க., பா.ஜ.க., காங்கிரஸ், தே.மு.தி.க., வி.சி.க., ம.தி.மு.க., பா.ம.க., த.வெ.க. உள்பட பல்வேறு கட்சிகள் தேர்தல் நடவடிக்கைகளை தொடங்கி விட்டன. சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க., பா.ஜ.க. இடையே கூட்டணி அமைந்துள்ளது.

அதேவேளை, டி.டி.வி. தினகரன் தலைமையிலான அ.ம.மு.க. பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றிருந்தது. ஆனால், சட்டசபை தேர்தலில் பா.ஜ.க. கூட்டணியில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி முதல்வர் வேட்பாளராக அறிவிக்கப்படுவதற்கு டி.டி.வி. தினகரன் எதிர்ப்பு தெரிவித்தார். இதையடுத்து, பா.ஜ.க. கூட்டணியில் இருந்து விலகுவதாக அமமுக பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் அறிவித்தார்.

இந்நிலையில், டி.டி.வி. தினகரனை பா.ஜ.க. மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை நேற்று முன்தினம் இரவு நேரில் சந்தித்தார். சென்னை அடையாறில் உள்ள டி.டி.வி. தினகரன் இல்லத்திற்கு அண்ணாமலை சென்றார். அங்கு டி.டி.வி. தினகரனும், அண்ணாமலையும் சுமார் ஒன்றரை மணி நேரம் ஆலோசனை நடத்தினர். இந்த ஆலோசனையின் போது தேசிய ஜனநாயக கூட்டணியில் மீண்டும் இணையுமாறு டி.டி.வி. தினகரனிடம், அண்ணாமலை வலியுறுத்தியதாக தெரிகிறது.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை கடந்த சில நாட்களுக்குமுன் அவரது இல்லத்திற்கு நேரில் சென்று பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் சந்தித்தார். தற்போது டி.டி.வி. தினகரனை அண்ணாமலை சந்தித்துள்ள நிகழ்வு அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சிறுபிள்ளைத்தனமாக பேசுகிறார்: விஜய் மீது அப்பாவு விமர்சனம்

**நெல்லை, செப். 23-**

சிறுபிள்ளைத்தனமாக பேசுகிறார் என்றும், விஜய்க்கு அகந்தை அதிகமாக உள்ளது என்றும் சபாநாயகர் அப்பாவு விமர்சித்துள்ளார்.

சபாநாயகர் அப்பாவு நெல்லையில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

முதல்வர், பிரதமர் குறித்து பேசும் போது கண்ணியமாக பேச வேண்டும். பின்புலத்தில் அமித் ஷா, பாஜக இருப்பதன் தைரியத்தில் விஜய் அகந்தையோடு பேசுகிறார். மத்திய அரசே சிலரை கட்சி தொடங்க வைத்து ஆட்சிக்கு நெருக்கடி கொடுக்கிறது. விஜய் சினிமாவில் பேசுவது போலவே பேசுகிறார். இந்த மாதிரி அகந்தை இருக்கக் கூடாது.

ஒய் பாதுகாப்பு கேட்காமலே கொடுத்துவிட்டதாக சொல்கிறார்கள். நான் ஒரு பிரசாரத்திற்கு வந்தால் இவ்வளவு நிபந்தனை போடுகிறீர்கள். பிரதமரோ, உள்துறை அமைச்சரோ பிரசாரத்திற்கு வந்தால் இப்படி நிபந்தனை போடுவீர்களா? சி.எம். சார் போட்டு பாருங்களேன்' என்று விஜய் சொல்வதிலிருந்தே அவர்கள்தான் இயக்குகிறார்கள் என்பது தெரிகிறது. விஜய்க்கு அரசியலில் அரிச்சுவடு தெரியாது என்று நினைக்கிறேன். விஜய் சிறுபிள்ளைத்தனமாக பேசுகிறார். இதை மக்கள் விரும்பவில்லை என அவர் கூறினார்.

# ஜி.எஸ்.டி. வரி சீர்திருத்தம் அமலானது: விலை கூடும் பொருட்களின் விவரம்

**புதுடெல்லி, செப். 23-**

ஜி.எஸ்.டி. வரி சீர்திருத்தம் நேற்று முதல் அமலாகியுள்ள நிலையில் சில பொருட்களின் விலை மேலும் உயரவுள்ளது.

வர்த்தகர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு ஏற்படும் சுமையை குறைக்கும் வகையில், நான்கு அடுக்குகளாக இருந்த ஜி.எஸ்.டி. எனப்படும் சரக்கு மற்றும் சேவை வரி, இரண்டு அடுக்குகளாக எளிமைப்படுத்தப்பட்டது.

இதன்படி 5, 12, 18 மற்றும் 28 சதவீதம் என நான்கு அடுக்குகளாக இருந்த ஜி.எஸ்.டி., 5 மற்றும் 18 என இரு அடுக்குகளாக மாற்றப்பட்டது. இந்த புதிய விகிதம் நேற்று முதல் அமலுக்கு வந்தது.

**விலை உயரும் பொருட்கள்**

இதன் காரணமாக அத்தியாவசிய பொருட்களின் விலை குறைய உள்ளது. அதேபோல சில பொருட்களின் விலை கூட இருக்கிறது. குறிப்பாக ஆடம்பர பொருட்களின் விலை கூட உள்ளது. சிகரெட், பான் மசாலா, குட்கா, மெல்லும் புகையிலைப் பொருட்கள் உள்ளிட்டவை கடுமையாக உயர உள்ளது. ஏனெனில் இவற்றுக்கான வரி 40 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

அதேபோல, குளிர்பானங்கள், 350 சிசி திறனுக்கு மேலே உள்ள பைக்குகள் (ராயல் என்ஃபீல்டு ஹிமாலயன் அல்லது 650 சிசி சீரிஸ் பைக்குகள்) விலை அதிகரிக்க உள்ளது. சொகுசு கார்கள், இறக்குமதி செய்யப்படும் எஸ்.யூ.வி கார்கள் ஆகியவையும் விலை கூட உள்ளது.

**விலை குறையும் பொருட்கள்**

சாக்லேட்டுகள், பாஸ்தா, ரெடிமேட் நூடுல்ஸ், பன்னீர், நெய், வெண்ணெய், உலர் பழங்கள், நொறுக்குத் தீனி உள்ளிட்டவைகளின் விலை குறைய உள்ளது. மக்களின் வீட்டு உபயோகப் பொருட்களான குளிர்சாதன இயந்திரம், குளிர்சாதன பெட்டி, சலவை இயந்திரம், 32 அங்குலம் மேல் உள்ள தொலைகாட்சி, பாத்திரம் கழுவும் இயந்திரம் ஆகியவை 28 சதவீதத்தில் இருந்து 18 சதவீத வரிக்குள் வந்து விட்டது. இதனால் இந்தப் பொருட்களின் சராசரி விலையில் இருந்து 10 சதவீதம் குறைகிறது.

உதாரணமாக ரூ.40 ஆயிரம் விற்கப்பட்ட குளிர்சாதன இயந்திரம், இப்போது ரூ.4 ஆயிரம் குறைந்து ரூ.36 ஆயிரமாகி இருக்கிறது. ஆடம்பர கார்களைத் தவிர 1,200 சிசி-க்கும் குறைவாக உள்ள கார்கள் அனைத்தும் விலை குறைக்கப்பட்டுள்ளன. அதன் வரி 28 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளதால், அதன் விலைக்கு ஏற்ப விலை குறைவு இருக்கிறது. அதாவது ரூ.65 ஆயிரம் முதல் ரூ.3½ லட்சம் வரை கார் விலை குறைகிறது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## கிரேன் மூலம் விஜய்க்கு மாலை:
# திருவாரூரில் 4 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு

**திருவாரூர், செப். 23-**

திருவாரூரில் விஜய்க்கு மாலை அணிவித்த விவகாரத்தில் 4 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

த.வெ.க. தலைவர் விஜய் கடந்த சனிக்கிழமை நாகை மற்றும் திருவாரூரில் சுற்றுப்பயணம் செய்தார். சென்னையிலிருந்து தனி விமானம் மூலம் திருச்சி வந்து, அங்கிருந்து சாலை மார்க்கமாக நாகப்பட்டினம் சென்று, பின்னர் திருவாரூருக்கு மதியம் 3 மணியளவில் வருகை தந்தார். திருவாரூர் தெற்கு வீதியில் விஜயின் மக்கள் சந்திப்பு நடைபெற்றது.

திருவாரூருக்கு வந்ததும், விஜயை வரவேற்கும் விதமாக கிரேன் மூலம் பிரம்மாண்ட மாலை அணிவித்து த.வெ.க. நிர்வாகிகள் வரவேற்பளித்தனர். தனது பிரசார வாகனத்தில் நின்றபடி அந்த மாலையை விஜய் ஏற்றுக்கொண்டார். இதற்கிடையே, திருவாரூரில் விஜய்க்கு மாலை அணிவித்த விவகாரத்தில் 4 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியது உள்ளிட்ட பிரிவின் கீழ் ஜே.சி.பி உரிமையாளர் மற்றும் த.வெ.க. நிர்வாகிகள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

# நவ.5 தொடங்கி 3 கட்டங்களாக பீகார் சட்டப்பேரவைத் தேர்தல்
## தலைமை தேர்தல் ஆணையம் திட்டம்

**புதுடெல்லி, செப். 23-**

பீகார் சட்டப்பேரவைத் தேர்தல் வரும் நவம்பர் 5 முதல் 15 தேதிக்குள் 3 கட்டங்களாக நடத்த தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

243 சட்டப்பேரவை உறுப்பினர்களைக் கொண்ட பீகார் சட்டப்பேரவையின் பதவிக் காலம் வரும் நவம்பர் 22-ம் தேதியுடன் முடிவுக்கு வருகிறது. அதற்கு முன்பாக தேர்தலலை நடத்தி முடிக்க வேண்டிய கட்டாயம் தேர்தல் ஆணையத்துக்கு உள்ளது. கடந்த 2020-ம் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல் அக்டோபர் 28 முதல் நவம்பர் 7 வரை 3 கட்டங்களாக நடைபெற்றது. அக்டோபர் 28-ம் தேதி 71 தொகுதிகளுக்கும், நவம்பர் 3-ம் தேதி 94 தொகுதிகளுக்கும், நவம்பர் 7-ம் தேதி 78 தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெற்றது. தேர்தல் முடிவுகள் நவம்பர் 10-ம் தேதி அறிவிக்கப்பட்டன. இம்முறையும் மூன்று கட்டங்களாக தேர்தல் நடைபெறும் என தகவல் வெளியாகி உள்ளது. பீகாரின் மிகவும் முக்கியமான பண்டிகையான சாட் பூஜை அக்டோபர் 28-ம் தேதி வருகிறது. எனவே, அந்த பண்டிகைக்குப் பிறகு தேர்தலை நடத்த தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளது.

பீகாரில் தேர்தல் ஏற்பாடுகளை ஆய்வு செய்ய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் அடுத்த வாரம் அம்மாநிலத்துக்குச் செல்ல உள்ளார். மேலும், பீகாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்ளப்பட்டு அதன்படி, மாநில இறுதி வாக்காளர் பட்டியல் செப்.30-ம் தேதி வெளியிடப்பட உள்ளது. எனவே, ஞானேஷ் குமாரின் பீகார் பயணம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.


பீகார் வாக்காளர் பட்டியலில் இருந்து 65 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் ஏற்கனவே அறிவித்துள்ளது. பெயர் விடுபட்டவர்கள், தகுந்த ஆவணங்களுடன் சேர்க்க தேர்தல் ஆணையம் கால அவகாசம் அளித்தது. எனவே, இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடும்போதுதான், எவ்வளவு வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன என்பதன் உண்மை நிலவரம் தெரியவரும். பெயர் நீக்கத்தில் முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டால், சிறப்பு தீவிர திருத்த நடைமுறை முழுமையாக ரத்து செய்யப்படும் என்று சுப்ரீம் கோர்ட் ஏற்கெனவே எச்சரித்துள்ளது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....




**வி**ஜய், முதல்வரின் வெளிநாட்டு பயணம் குறித்து விமர்சனம் செய்திருப்பது அவருடைய தகுதிக்கு நல்லதல்ல. அ.தி.மு.க.- பா.ஜ.க.வை பொறுத்தவரை அவர்கள் திடீரென கூட்டணி சேருகிறார்கள். திடீரென அந்த கூட்டணியில் பலர் வெளியே செல்கிறார்கள். இதுகுறித்து அவர்களிடம் தான் கேட்க வேண்டும்.

**- துரை வைகோ**




**பு**துச்சேரி அரசுமின் துறையை தனியாருக்கு ஒப்படைத்தால் தொழில் நிறுவனங்களும் பாதிக்கப்படும். மக்களுக்கான வேலை வாய்ப்புகள் குறைந்து, மக்களின் பொருளாதாரம் பாதிக்கப்படும். அத்தோடு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரும் இலவச மின்சாரம் உள்ளிட்ட சலுகை பறிக்கப்படும். இதை கைவிட வேண்டும்.

**- ராமதாஸ்**



**ச**மூகநீதிக்கு மீண்டும், மீண்டும் துரோகம் செய்யும் திராவிட மாடல் அரசுக்கு தமிழக மக்கள் உரிய பாடம் புகட்டுவார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை தமிழகத்தில் மேற்கொள்ள ரூ.500 கோடி மட்டுமே செலவாகும். இதை உடனே தமிழ்நாடு அரசு நடத்த வேண்டும்.

**- அன்புமணி**



**ம**க்கள் தங்களின் பருப்பு, அரிசி, தானியங்கள், பென்சில், புத்தகம், மருத்துவ சிகிச்சைகள் மற்றும் விவசாயிகளின் டிராக்டர்கள் என ஒவ்வொன்றுக்கும் நீங்கள் ஜி.எஸ்.டி. வசூலித்ததை ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள். இதற்காக பா.ஜ.க. அரசு மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்.

**- ஜெய்ராம் ரமேஷ்**

# திருச்சி மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் வே.சரவணன் தலைமையில் நடைபெற்றது



**திருச்சி,செப்.23-**

திருச்சி ராப் பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் வே.சரவணன், தலைமையில் (22.09.2025) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், இலவச வீட்டுமனைப் பட்டா, பட்டா மாறுதல், சாதிச் சான்றுகள், தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் வீடு ஒதுக்கீடு தொடர்பான மனுக்கள், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வேண்டி மனுக்கள், முதியோர் உதவித் தொகை, விதவை உதவித்தொகை, விபத்து நிவாரணத்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை மற்றும் நலிந்தோர் நலத்திட்ட உதவித்தொகைகள் பெறுவது தொடர்பான மனுக்கள், தெருவிளக்கு, தண்ணீர் இணைப்பு குழாய், தொகுப்பு வீடு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் வேண்டுவது தொடர்பான மனுக்கள், கல்வி உதவித்தொகை, வங்கி கடன், 2 பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்ட உதவிகள், தையல் இயந்திரம், சலவைப்பெட்டி வேண்டி விண்ணப்ப மனுக்கள் மேலும் ஓய்வூதிய பயன், தொழிலாளர் நல வாரியம் தொடர்பான மனுக்கள், வேலை வாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 617 மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டது. இம்மனுக்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு கலெக்டர் உத்தரவிட்டார்.

நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுத்திறனாளி பயனாளிக்கு ரூபாய் 15,000 மதிப்பிலான மடக்கு சக்கர நாற்காலியை கலெக்டர் வே.சரவணன்;,; வழங்கினார். இம்மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ர.ராஜலட்சுமி, சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை கலெக்டர் க.நல்லையா, உதவி ஆணையர்(கலால்) உதயக்குமார், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் எஸ்.ஜெயசித்ரகலா, ஆதிதிராவிடர் நல அலுவலர் (பொ) உதயக்குமார், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் இரா.இரவிச்சந்திரன், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கரூரில் எடப்பாடி பழனிசாமி சுற்றுபயணம் மேற்கொள்ள உள்ளதை முன்னிட்டு ஆலோசனை கூட்டம்

## முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் தலைமையில் நடந்தது



**கரூர்,செப்.23-**

கரூர் மாவட்டத்தில் உள்ள நான்கு தொகுதிகளிலும் எடப்பாடி பழனிசாமி சுற்றுபயணம் மேற்கொள்ள உள்ளதை முன்னிட்டு முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் தலைமையில் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது

முன்னாள் முதல்வர் அதிமுக பொதுசெயலாளர் எடப்பாடி பழனிசாமி வருகின்ற செப்டம்பர் 25, 26ம் தேதி கரூர் மாவட்டத்தில் உள்ள நான்கு தொகுதிகளிலும் மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம் என்ற நோக்கத்துடன் எழச்சி பயணத்தை மேற்கொள்கிறார் அவருக்கு சிறப்பான வரவேற்பை அளித்து நிகழ்ச்சியை நடத்துவது சம்பந்தமாக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது கூட்டத்திற்கு முன்னாள் அமைச்சர் கரூர் மாவட்ட அதிமுக செயலாளர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் தலைமை தாங்கினார் கரூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கரூர் கிழக்கு ஒன்றியம் மண்மங்கலம் ஊராட்சி சார்பிலும் என்.புதூர் கடம்பன்குறிச்சி ஊராட்சி சார்பிலும் வாங்கல் ஊராட்சி சார்பிலும் நெரூர் வடபாகம் தென்பாகம் சோமூர் ஊராட்சி சார்பிலும் மின்னாம்பள்ளி பஞ்சமாதேவி ஊராட்சி சார்பிலும் கரூர் மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பிலும் மேலும் பாஜக நிர்வாகிகளுடனும் மறறும் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக வார்டு சார்பு அணி நிர்வாகிகளுடனும் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது இக்கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமிக்கு சிறப்பாக வரவேற்பு அளிப்பது நிகழ்ச்சியை சிறப்பாக நடத்துவது தொடர்பாக முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கி சிறப்புரை வழங்கினார் நிகழ்ச்சியில் துணை செயலாளர் ஆலம் தங்கராஜ் துணை செயலாளர் மல்லிகாசுப்ராயன் பொருளாளர் கண்ணதாசன் எம்.ஜி.ஆர் மன்ற செயலாளர் தங்கவேல் மத்திய நகர செயலாளர் சேரன் பழனிசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

# மயிலாடுதுறை மாவட்ட பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 265 மனுக்கள் பெறப்பட்டன

## கலெக்டர் ஹெச்.எஸ்.ஸ்ரீ காந்த் தகவல்



**மயிலாடுதுறை,செப்.23-**

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியரக கூட்ட அரங்கில் பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் . ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த் தலைமையில் நடைபெற்றது. மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களில் இருந்து பொதுமக்கள் வருகை புரிந்து கலெக்டர் அவர்களிடம் மனுக்களை அளித்தனர்.

இக் கூட் டத் தில், இலவச வீட்டுமனை பட்டா மற்றும் பட்டாமாறுதல் கோரி 24, மனுக்களும், வேலை வாய்ப்பு கோரி 08 மனுக்களும், ஆக்ரமணம் அகற்ற கோரி 15, முதியோர், மாற்றுத் திறனாளிகள், மற்றும் விதவை உதவித்தொகை கோரி 22 மனுக்களும், பல்வேறு புகார்கள் தொடர்பாக மனுக்கள் 25 மாற்றுத்திறனாளிகள் அடையாள அட்டை, மாற்றுத்திறனாளி உதவிதொகை, வங்கிகடன், மாற்றுத்திறனாளி உபகரணங்கள் கோரி 21 மனுக்களும், அடிப்படை வசதி கோரி 18 மனுக்களும், நில அபகரிப்பு மற்றும் நில பிரச்சனை தொடர்பாக 12 மனுக்களும், தொழிற்கடன் வழங்க கோரி 36 மனுக்களும், இலவச கான்கிரீட் வீடு வேண்டி 10 , மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் தொடர்பாக 05, குடும்ப அட்டை தொடர்பாக 11, சட்டம் ஒழுங்கு தொடர்பாக 13, தொழிலாளர் நலன் தொடர்பா 04, மற்றும் இதர கோரிக்கை தொடர்பான மனுக்கள் 41 என மொத்தம் 265 மனுக்கள் பெறப்பட்டன. இம்மனுக்களை கலெக்டர் சம்மந்தப்பட்டதுறை அலுவலர்களிடம் ஒப்படைத்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார். மேலும், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விபரத்தை மனுதாரர்களுக்கு தெரிவிக்க வேண்டும் என கலெக்டர் தெரிவித்தார்.

பின்னர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 3 பயனாளிகளுக்கு தலா ரூ.6552 மதிப்பில் இலவச சலவைப் பெட்டிகளை மாவட்ட கலெக்டர் வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் .உமாமகேஷ்வரி, துணை கலெக்டர் (சமூக பாதுகாப்பு திட்டம்) கீதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சட்டம்) .அன்பழகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# திருவாரூர் மாவட்ட திமுக சார்பில் ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு பொதுக்கூட்டம்

## அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்பு



**திருவாரூர்,செப்.23-**

தமிழ்நாட்டின் மண்,மொழி,மானம் காக்க திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் உத்தரவு படி மாவட்ட திமுக சார்பில் திருவாரூர் தெற்கு வீதியில் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன், ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு பொதுகூட்டம் கட்சியின் மாவட்ட செயலாளரும், எம்.எல்.ஏவுமான பூண்டிகலைவாணன் தலைமையில் நடைபெற்றது. தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா,தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ் விஜயன்,முன்னாள் அமைச்சர் மதிவாணன், தாட்கோ தலைவர் இளையராஜா,முன்னாள் மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் பாலு உள்ளிட்ட பங் கேற் ற னர்.இ தில் முதன்மை செயலாளரும்,திருச்சி மண்டல பொறுப்பாளரும்,நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு கலந்துகொண்டு பேசுகையில், நம்முடைய முதல்வர் என்ன செய்தார் என்று இங்கு ஒருவர் கேட்டுள்ளார்.கடந்த 10 ஆண்டு கால அதிமுக ஆட்சியின் காரணமாக இருந்த கடும் நிதி சுமையை நம்முடைய முதல்வர் பொறுப்பேற்ற பின்னர் சமாளித்து,கொரோனா நோயினையும் சமாளித்து ஆட்சியை சிறப்பாக நடத்தி கொண்டு வருகிறார்.ஒரு பக்கம் பார்த்தால் திமுகவை அழிப்பதற்காக ஒன்றிய அரசு எவ்வளவோ முன்னெடுப்புகளை எடுத்து வருகிறது.எந்த நிதியும் தமிழ்நாட்டிற்கு கொடுக்காமல் நிதி நெருக்கடியை உண்டாக்கி மக்களிடையே கெட்ட பெயரை ஏற்படுத்தும் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.அதுமட்டுமல்ல எல்லா தேர்தல்களிலும் திமுகவினர் வெற்றி பெற்று வருகின்றனர் என்பதற்காக பீகாரை போல தமிழகத்திலும் வாக்கு திருட்டில் ஈடுபடும் முயற்சியை மேற்கொண்டு வருகின்றனர். ஒன்றிய அரசுக்கு நாம் கொடுக்கும் 9.2 சதவிகித நிதியில் வெறும் 4.7 சதவிகித நிதியை மட்டுமே திருப்பி வழங்கி வருகின்றனர். திமுக அரசு அமைந்த பின்னர் கடந்த 4 ஆண்டு காலத்தில் மட்டும் அரசு பணியாளர் தேர்வாணையம் மூலமாக ஒரு லட்சம் பேர் பணியில் சேர்ந்துள்ளனர். தொழில்துறை மூலமாக அதிக தொழிற்சாலைகள் கொண்டுவரப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே அதிக தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் தான். அதைபோல, இந்தியாவிலேயே தொழிற்சாலைகளில் பெண்கள் அதிகமாக பணியாற்றுவதும் தமிழகத்தில் தான். எனவே தான் திராவிட நாயகரான நமது முதல்வரை மீண்டும் மீண்டும் முதல்வராக்க நாம் கடமையாற்றிட வேண்டும்.திருவாரூர் மாவட்டத்திற்கு என்ன செய்தீர்கள் என்று நேற்று ஒருவர் கேட்டதற்காக சொல்கிறேன். மாவட்டத்தில் இருந்து வரும் 4 நகராட்சிகளுக்கும் 4 ஆண்டு காலத்தில் ரூ 632 கோடி நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்றுள்ளன. 7பேரூராட்சிகளுக்கும் ரூ 103 கோடி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்றுள்ளன. இதை தவிர குடிநீர் திட்டங்களுக்காக ரூ ஆயிரத்து 127 கோடி நிதி ஒதுக்கீடு என மொத்தம் ரூ ஆயிரத்து 862 கோடியில் பணிகள் நடைபெற்றுள்ளது என்பதை தெரிவித்துகொள்கிறேன். இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்துள்ளார். முன்னதாக நகர செயலாளர் பிரகாஷ் வரவேற்றார். நீடாமங்கலம் பேரூர் கழக செயலாளர் ராஜசேகரன் நன்றி கூறினார்.திருவாரூரில் ஆழித்தேரோட்டத்தின் போது பல்லாயிரகணக்கான பக்தர்கள் கலந்துகொள்வது வழக்கம்.திமுக கூட்டத்தில் மாவட்டம் முழுவதுமிருந்து சுமார் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டதால் தேர் திருவிழா போன்று கூட்டம் நடைபெற்றது குறிப்பிடதக்கது.

# புதுக்கோட்டை மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் மு.அருணா தலைமையில் நடைபெற்றது



**புதுக்கோட்டை,செப்.23-**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், கலெக்டர் மு.அருணா, தலைமையில் (22.09.2025) நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலெக்டர் தெரிவித்ததாவது;

பொதுமக்களின் குறைகளை மனுக்களாக பெற்று தீர்வு காணும் வகையில், வாரந்தோறும் திங்கட்கிழமைகளில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் இன்றையதினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், முதியோர் உதவித்தொகை, வேலை வாய்ப்பு, கல்வி உதவித்தொகை, பட்டாமாறுதல்; போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 590 மனுக்களை பொதுமக்கள் அளித்தனர். இம்மனுக்களின் மீது விசாரணை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அரசு அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது எனவும் கலெக்டர் மு.அருணா, தெரிவித்தார். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன் , உதவி ஆணையர் (கலால்) தி.திருமால் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பெரம்பலூர் மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் ந.மிருணாளினி தலைமையில் நடைபெற்றது



**பெரம்பலூர்,செப்.23-**

பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், கலெக்டர் ந.மிருணாளினி தலைமையில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் (22.09.2025) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் இருக்கும் இடத்திற்கே கலெக்டர் சென்று கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து, தாட்கோ சார்பில், 25 உறுப்பினர்களுக்கு தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டைகளை கலெக்டர் வழங்கினார்.

பின்னர், முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுக்கள், அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளில் பொதுமக்கள் வழங்கிய கோரிக்கை மனுக்கள், மக்கள் தொடர்பு திட்ட முகாம்கள் மற்றும் கடந்த வாரங்களில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டங்களில் பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களுக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், ஒரு மாதத்திற்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்படாத மனுக்களின் விவரங்களையும், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கலெக்டர் விரிவாக ஆய்வு மேற்கொண்டார். குறிப்பாக உங்களுடன் ஸ்டாலின் முகாம்களில் வழங்கப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை குறித்து விரிவாக ஆய்வு செய்த கலெக்டர் தகுதியுடைய அனைவருக்கும் அரசின் நலத்திட்ட உதவிகள் கிடைக்கப்பெறுவதை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டும் என தெரிவித்தார்.

தொடர்ந்து, முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, தொழில் தொடங்க கடன் உதவி, வீட்டுமனைப்பட்டா, விதவை உதவித்தொகை, ஆதரவற்றவற்றோர் உதவித்தொகை, பட்டா மாறுதல், கல்விக் கடன் கோருதல், இலவச தையல் இயந்திரம் கோருதல், கலைஞர் மகளிர் உரிமை தொகைத் திட்டம், கலைஞர் கனவு இல்லம் திட்டம், அடிப்படை வசதிகள் கோருதல் உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 398 மனுக்களை பொதுமக்களிடமிருந்து கலெக்டர் உள்ளிட்ட அலுவலர்கள் பெற்றுக்கொண்டனர்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல்பிரபு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) வைத்தியநாதன், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் சக்திவேல், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை கலெக்டர் சிவக்கொழுந்து, sமாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவலர் வி.வாசுதேவன், தாட்கோ மேலாளர் கவியரசு, உள்ளிட்ட அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அரியலூர் மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 296 மனுக்கள் பெறப்பட்டது

## மாவட்ட வருவாய் அலுவலர் தகவல்

**அரியலூர் செப்.23-**

அரியலூர் மாவட்ட கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் (22.09.2025) நடைபெற்றது. இக்கூட்டத்தில், முதியோர் உதவித் தொகை, இலவச வீட்டு மனைப்பட்டா, மாற்றுத்திறனாளி உதவித்தொகை, தொழில்கடன், பசுமை வீடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 296 மனுக்கள் பொதுமக்களிடமிருந்து மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் பெறப்பட்டு, இம்மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் க.ரா.மல்லிகா, மாவட்ட நிலை அலுவலர்கள் மற்றும் அனைத்துதுறை அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் திருவாரூர் வடக்கு மாவட்டம் சார்பில் ஏகத்துவ எழுச்சி பொதுக்கூட்டம்



**திருவாரூர்,செப்.23-**

தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் திருவாரூர் வடக்கு மாவட்டம் அடியக்கமங்கலம் கிளைகள் சார்பில் மாவட்டத் தலைவர் பீர் முகமது தலைமையில் ஏகத்துவ எழுச்சி பொதுக்கூட்டம் நடைபெற்றது.கிளை 1 தலைவர் முஹம்மது ஹ§சைன், செயலாளர் தன்வீர்,பொருளாளர் ஜாவித் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இப்பொது கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக மாநில தணிக்கை குழு தலைவர் சுலைமான் மற்றும் மாநில பேச்சாளர் அப்துர் ரஹ்மான் ஆகியோர் கலந்து கொண்டு இறைவனின் கட்டளைப்படி,இறைத்தூதர் முஹம்மது நபி மூலம் காட்டிக் கொடுத்த வாழ்க்கை முறைப்படி இஸ்லாமியர்கள் தங்களுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்றும் நவீன காலத்தில் நடைபெறும் திருமணத்தில் உள்ள அனாச்சாரங்களை இஸ்லாமியர்கள் தவிர்க்க வேண்டும் என்றும் கூறினார்கள். கூட்டத்தில் ஆண்கள்,பெண்கள் குழந்தைகள் என சுமார் ஐநூறுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.இறுதியாக கிளை2 தலைவர் முகமது ஹக் நன்றி உரையாற்றினார்.இந்திய குடிமகன்களின் ஒரு பிரிவினரின் மத நம்பிக்கைகளை மதிக்க தவறுவது,இந்திய அரசியலமைப்புச்சட்டத்திற்கு எதிரானது, ஆகவே ஒட்டு மொத்தமாக வக்ப் வாரிய திருத்தச்சட்டத்தை நிறுத்தி வைக்க வேண்டும்,காஸா பகுதியில் தரைவழித்தாக்குதலை நிறுத்த அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளுக்கு இந்தியா உரிய அழுத்தத்தை தர வேண்டும்,அமெரிக்காவின் 50 சதவிகித வரி விதிப்பை தடுக்காத ஒன்றிய பாஜக அரசை கண்டிப்பது,எஸ் ஐஆர் மூலம் இந்திய ஜனநாயகத்தை அச்சுறுத்தலுக்குள்ளாக்கும் தேர்தல் ஆணையத்தினை கண்டிப்ப,தமிழக அரசு இஸ்லாமியர்களுக்கான 3.5 சதவீத இடஒதுக்கீட்டை 7 சதவீதமாக அதிகரிக்க வேண்டும் என்பது உட்பட பல்வேறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

# கரம்பக்குடி ஒன்றியத்தில் நடைபெறும் பணிகள்: திட்ட இயக்குனர் நேரில் ஆய்வு



**புதுக்கோட்டை,செப்.23-**

கரம்பக்குடி ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் நடந்து வரும் திட்ட பணிகளை புதுக்கோட்டை மாவட்ட ஊர வளர்ச்சி முகமை இணை இயக்குனர்/திட்ட இயக்குனர் பா.ஜெயசுதா பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதில் ஒரு பகுதியாக புதிதாக கட்டப்பட்டு வரும் கரம்பக்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார் பின்பு குழந்திரான்பட்டு ஊராட்சியில் மரக்கன்றுகள் நடவு செய்யும் நர்சரியை பார்வையிட்டு ஆய்வு செய்தார் பின்பு கலைஞர் கனவு இல்லம் கட்டும் பணிகளை ஆய்வு செய்து அதிகாரிகளிடமும் பயனாளிகளிடமும் வீடு கட்டும் பணிகளை விரைவாக முடிக்க அறிவுறுத்தினார் திட கழிவு மேலாண்மை திட்டப் பணிகளான குப்பை தரம் பிரிக்கும் கொட்டகை மண்புழு தயாரிக்கும் உரக்கூடம் மக்கும் குப்பைகள் கொட்டப்படும் உரக்குழிகள் தூய்மை காவலர்கள் வேலை அட்டவணை போன்றவைகளை ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செந்தில்குமார் நலதேவன் உதவி பொறியாளர்கள் நிர்மல் ராஜ்குமார் விக்னேஸ்வரன் இளநிலை பொறியாளர் சித்ரா ஒன்றிய பணி மேற்பார்வையாளர் சுரேஷ் DPMU பழனி முருகன் வட்டார ஒருங்கிணைப்பாளர் விஜயலட்சுமி ஊராட்சி செயலாளர் முருகேசன் மற்றும் ஊக்குநர் ஆகியோர் உள்பட அதிகாரிகள் உடன் இருந்தனர்.

# நாகப்பட்டினம் மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

## கலெக்டர் ப.ஆகாஷ் தலைமையில் நடைபெற்றது

**நாகப்பட்டினம்,செப்.23-**

நா கப் பட் டி னம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில்;; மக்கள் குறைதீர்;க்கும் நாள் கூட்டம்; கலெக்டர் ப.ஆகாஷ்தலைமையில் (22.09.2025) நடைபெற்றது.

வாராந்திர மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வங்கிக் கடன் உதவித்தொகைகுடும்ப அட்டைவேலை வாய்ப்பு மற்றும் கல்வி உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மொத்தம் 175 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு கலெக்டர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ஆர்.கண்ணன் தனி துணை கலெக்டர் (சமூக பாதுகாப்பு திட்டம்)(பொ) அ.பரிமளாதேவி மற்றும் அரசு அலுவலர்கள் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்

# அரியலூரில் மாவட்ட திமுக சார்பில் ஓரணியில் தமிழ்நாடு பொதுக்கூட்டம்

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு



**அரியலூர்,செப்.23-**

அரியலூர் அண்ணா சிலை அருகே, மாவட்ட திமுக சார்பில் ஓரணில் தமிழ்நாடு விளக்க பொதுக்கூட்டம் நேற்று நடைபெற்றது.கூட்டத்திற்கு வருகை தந்த அனைவரையும் மாவட்ட திமுக பொருளாளர், கு. ராஜேந்திரன்வரவேற்றார். கூட்டத்திற்கு மாநில சட்ட திட்ட குழு இணை செயலாளர் சுபா சந்திரசேகர் தலைமை வகித்தார். கூட்டத்திற்கு மாவட்டத் துணைச் செயலாளர் மு கணேசன்,சி.சந்திரசேகரன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் சி ஆர் எம் பொய்யாமொழி,ஆர் எம் அன்பழகன், இரா பாலு,வி எம் ஷாஜகான், சுமதி கருணாநிதி உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப் பாளர்களாக மாவட்ட திமுக செயலாளர் ,போக்குவரத்து மற்றும் மின்சார துறை அமைச்சர் சா சி சிவசங்கர்,தலைமைக் கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ண மூர்த்தி,அரியலூர் சட்டமன்றத் தொகுதி மேலிட பார்வையாளர் ப. அன்பரசு,தலைமை செயற்குழு உறுப்பினர் எம் பி பாலசுப்பிர மணியம் உள்ளிட்டோர் சிறப்பு அழைப்பாளர்களாக கூட்டத்தில் கலந்து கொண்டு, தமிழக முதல்வர் மு .க ஸ்டாலினின் ஓரணியில் தமிழ்நாடு என்ற முன்னெடுப்பின் அவசியம் குறித்து, தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம் என்ற முதல்வரின் உறுதிமொழி குறித்தும் சிறப்புரையாற்றினர். தொடர்ந்து , கூட்டத்தில் தமிழ்நாட்டை தலைகுனிய விட மாட்டோம் என்ற தமிழக முதல்வர் முன்னெடுப்பு உறுதிமொழியினை, மாநில சட்ட திட்டதிருத்த இணை செயலாளர் சுபா சந்திரசேகர் வாசிக்க, எழுந்து நின்று அனை வரும்அதனை ஏற்றனர்.

தொடர்ந்துகூட்டத்தில் உறுப்பினர் சேர்க்கையில் சிறப்பாக பணி புரிந்த ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் அனைவரையும் ,போக்குவரத்து மற்றும் மின்சார துறை அமைச்சர் சா .சி சிவசங்கர் கேடயங்கள் வழங்கி பாராட்டி னார்.தொடர்ந்து ஆண்டிமடம் ஒன்றியம் அழகாபுரம், புதுக் குடி,கொளத்தூர், சிலம்பூர், கொடுக்கூர் உள்ளிட்ட கிராம ங்களில் இருந்து 100க்கும் மேற்பட்டோர் ,மாவட்ட திமுக செயலாளர் சா சி சிவசங்கர் முன்னிலையில் மாற்றுக் கட்சியில் இருந்து விலகி திமுகவில் இணைந்தனர்.இந்நிகழ்வில் ஒன்றிய திமுக செயலாளர் கள்தனசேகர்,இரா கென்னடி ,நகரச் செயலாளர்கள் இரா முருகேசன், வெ. கோ கருணாநிதி, பேரூர் கழக செயலாளர் கோபாலகிருஷ் ணன்,ஒன்றிய செயலாளர்கள் இராமணிமாறன்,மா அன்பழகன், ரெ. அசோக சக்கரவர்த்தி,ரெங்க முருகன், கோ. அறிவழகன், ஆர்கலிய பெருமாள்,வி எழில்மாறன்,இரா அண்ணாதுரை, ப.தனவேல்,தெய்வ இளையராஜன்,நா.கணேசன், பொன் செல்வம்,கே ஜி எஸ் முருகன்,இரா.செந்தில்குமார், பேரூர் கழக செயலாளர் அ. அல்போன்ஸ், அரியலூர்நகர மன்ற தலைவர்சாந்தி,உடையார்பாளையம்பேரூராட்சிதலைவர்மலர்விழி,வரதராஜன் பேட்டை பேரூராட்சி தலைவர் மார்க்கெட் அல்போன்ஸ், மாவட்ட சார்பு அணி செயலாளர்கள் , ஒன்றிய, நகர ,கிளை நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.கூட்ட முடிவில் மாவட்ட திமுக துணை செயலாளர் லதாபாலு நன்றி கூறினார்.

# ஆஞ்சநேயர்கோயிலில் வழிபாடு



**கும்பகோணம்,செப்.23-**

குடந்தை பாலக்கரை காமராஜர்நகர் விஸ்வரூப ஜெயமாருதி கோயிலில் புரட்டாசி மாதம் அமாவா சையை முன்னிட்டு ஸ்ரீபத்மக்கமலம் எனும் தாமரை மலர்கள் சிறப்பு அலங்காரத்தில் ஸ்ரீவிஸ்வரூப ஜெயமாருதி எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பா லித்தார். புரட்டாசி மாதம் அமாவாசையை முன் னிட்டு 11 அடி உயரமுள்ள விஸ்வரூப ஆஞ்சநேயருக்கு ஸ்ரீபத்மக்கமலம் எனும் தாமரை மலர்கள் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு, மகாதீபாராதனை செய்யப்பட்டது. தொடர்ந்து மட்டை தேங்காய் வழிபாடும், உலக நன்மை வேண்டி, விவசாயம் செழிக்க மழை வேண்டி சிறப்பு கூட்டுப் பிரார்த்தனைகள் மற்றும் விசேஷ பூஜைகளும் செய்யப்பட்டு பக்தர் களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. ஏற்பாடு களை விஸ்வரூப ஜெயமாருதி கோயில் நிர்வாகிகள் ராமன், மோகன் பட்டாச்சாரியார் மற்றும் பக்தர்கள் செய்திருந்தனர்.

# தஞ்சாவூர் மாவட்டத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

## கலெக்டர் தலைமையில் நடைபெற்றது


**தஞ்சாவூர்,செப்.23-**

தஞ்சாவூர் மாவட்டம் கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில் பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம், தலைமையில் (22.09.2025) நடைபெற்றது. இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித்தொகை, குடும்ப அட்டை, பட்டா மாற்றம், கல்விக் கடன் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 575 மனுக்களை பொதுமக்கள் மாவட்ட கலெக்டர் அவர்களிடம் வழங்கினார்கள். இம்மனுக்கள் மீது உரிய நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம், உத்தரவிட்டார்கள்.

மேலும், தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் வட்டத்தைச் சேர்ந்த ஆரோக்கியசாமி அந்தோணி டேவிட் என்பவர் சவுதி அரேபியாவில் பணிபுரிந்து இறந்ததையொட்டி அவருக்கு சேர வேண்டிய சட்டப்படியான நிலுவைத் தொகை ரூ.2,98,619 க்கான காசோலையினை அவரது குடும்ப உறுப்பினர்களிடம் கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம்,இ.ஆ.ப வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், தனி மாவட்ட வருவாய் அலுவலர்கள் பவானி, வேலுமணி, சமூக பாதுகாப்புத் திட்டம் தனித்துணை கலெக்டர் கண்ணன் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் தஞ்சை வடக்கு மாவட்டத்தின் 20-வது மாவட்ட பொதுக்குழு



**தஞ்சாவூர்,செப்.23-**

தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் தஞ்சை வடக்கு மாவட்டத்தின் 20-வது மாவட்ட பொதுக்குழு கும்பகோனத்தில் மாநில செயலாளர் S.முஹம்மது யாசிர் தலைமையில் மாநில பொது செயளாளர் முஜிபுர் ரஹ்மான் முன்னிலையில் நடைபெற்றது. இதில் 200 கக்கும் மேற்ப்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் , கிளை நிர்வாகிகள் மற்றும் மாவட்ட பேச்சாளர்கள் கலந்து கொண்டனர்.

இன் நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் முஹம்மது கலந்தர் மாவட்ட துணைத் தலைவர் முஹம்மது ஃபாருக் மாவட்ட துணை செயலாளர்கள் ஜாபர் அலி சிக்கந்தர் அலி ராஜ் முஹம்மது அப்துர் ரஷீத் அய்யூப்கான் மாவட்ட மாணவனி செயலாளர் அலி முஹம்மது மற்றும் மாவட்ட தொண்டர் அணி செயலாளர் யாசின் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இறுதியாக மாவட்ட தலைவர் அப்துல் ரஹ்மான் நன்றியுரையாற்றினார்கள்.. இப்பொதுக்குழுவில் எடுக்கப்பட்ட தீர்மாணங்கள் ஏமாற்றமளிக்கும் இடைக்கால வக்ப் தீர்ப்பு

அதே நேரத்தில் ஒரு சில பிரிவுகளை மட்டும் நடைமுறைப்படுத்துவதற்கு தடைவிதித்துள்ளனர், மிக முக்கியமாக இஸ்லாமியர் அல்லாதவர்கள் வக்ப்வாரியத்தில் உறுப்பினர் ஆகலாம் எனும் பிரிவை அனுமதிப்பதன் மூலம், இதே நடைமுறையை இந்து அறநிலையத்துறையிலும் நடைமுறைப்படுத்த சட்டம் அனுமதிக்குமா? எனும் கேள்வி வருகிறது, இந்திய குடிமகன்களின் ஒரு பிரிவினரின் மத நம்பிக்கைகளை மதிக்க தவறுவது , இந்திய அரசியலமைப்புச்சட்டத்திற்கு எதிரானது, ஆகவே ஒட்டு மொத்தமாக வக்ப் வாரிய திருத்தச்சட்டத்தை நிறுத்தி வைக்க வேண்டும் என இப்பொதுக்குழு வாயிலாக கேட்டுக்கொள்கிறோம் . மேற்கண்ட தீர்மானம் உட்பட ஆறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

# கல்லம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு ஒன்றரை லட்சம் மதிப்பீட்டில் உணவுக்கூடம்

**பொன்னமராவதி,செப்.23-**

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி அருகே கல்லம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 183 மாணவ,மாணவிகள் பயின்று வருகின்றனர்.அவர்களுக்கு மதிய உணவு அருந்த உணவுக்கூடம் அமைத்து தரவேண்டும் என நகரபட்டி என்.ஆர்.அன்பு அறக்கட்டளை தலைவர் நடராஜனிடம் பள்ளியின் ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்தனர். இதனையடுத்து என்.ஆர்.அன்பு அறக்கட்டளை சார்பில் சுமார் ரூ.1,20,000 மதிப்பீட்டில் புதியதாக உணவுஉண்ணும் கூடம் அமைக்கப்பட்டது.இந்த புதிய உணவுக்கூடத்தை என்.ஆர். அன்பு அறக்கட்டளையின் நிறுவனர் நடராஜன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.இந்நிகழ்விற்கு வட்டார கல்வி அலுவலர்கள் கலா,இலாஹி ஜான் தலைமை வகித்தனர். பள்ளியின் தலைமையாசிரியர் அருள்வளவன் முன்னிலை வகித்தார். ஆசிரியர்களின் கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றிய என் ஆர் அன்பு அறக்கட்டளைக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.இந்நிகழ்வில் பள்ளியின் ஆசிரியர்கள்,பள்ளி மேலாண்மைக் குழுவினர், மாணவர்கள் ,ஊர் முக்கியஸ்தர்கள் அதிமுக நிர்வாகிகள் அருண் மற்றும் கல்லம்பட்டி கணேசன் என பலர் கலந்து கொண்டனர்.

# கரூர் மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் ரூ.41லட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள்

## கலெக்டர் மீ.தங்கவேல் வழங்கினார்



**கரூர்,செப்.23-**

கரூர் மாவட்ட ஆட்சியரகத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் 9 பயனாளிகளுக்கு ரூ.41.00 இலட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் (22.09.2025) வழங்கினார்.

மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது,பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணவும், அடிப்படைத் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்திடவும், பெண்களின் முன்னேற்றத்திற்கு தேவையான நடவடிக்கைகள் உள்ளிட்ட பணிகளில் அரசு அலுவலர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமெனவும், குறிப்பாக பொதுமக்கள் ஒருமுறை வழங்கிய மனுக்கள் மீண்டும் வராத வகையில் மனுவின் மீது உரிய தீர்வு வழங்கப்படுவதை அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர்உதவித்தொகை, இலவச வீட்டுமனைப் பட்டா, வங்கிக்கடன்கள், பட்டா மாறுதல், சாதிச்சான்று, வேலைவாய்ப்பு, கல்வி உதவித்தொகை, திருமண நிதியுதவி, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை, உதவி உபகரணங்கள், குடிநீர் வசதி, சாலை வசதி உட்பட அடிப்படை வசதிகள் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 520 மனுக்கள் வரப்பெற்றன.

இதில் மாற்றுத்திறனாளிகள் எவ்வித சிரமமும் இன்றி மனுக்களை வழங்கும் வகையில் மாவட்ட ஆட்சியரகத்தின் தரை தளத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கென நடத்தப்பட்டு வரும் குறைதீர் முகாமில் வீட்டுமனைப் பட்டா, உதவி உபகரணங்கள், பராமரிப்பு உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து அளிக்கப்பட்ட 23 மனுக்களைப் பெற்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து மண்மங்கலம் வட்டம், பஞ்சமாதேவி கிராமத்தைச் சேர்ந்த காளியப்பன் என்பவரின் மனைவி அழகம்மாள் நீரில் மூழ்கி உயிரிழந்ததால் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 1.00 இலட்சம் காசோலையினையும்,

தாட்கோ மூலம் முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டத்தின் கீழ் 8 பயனாளிகளுக்கு தொழில் தொடங்குவதற்கு தலா ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் வங்கிக் கடனுதவிகளும் என மொத்தம் ரூ.41.00 இலட்சம் மதிப்பீட்டில் 9 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் வழங்கினார். இக்கூட்டத்தில் குளித்தலை சார் கலெக்டர் தி. சுவாதி ஸ்ரீ, சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை கலெக்டர் பிரகாசம், உதவி ஆணையர் கலால் முருகேசன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் மரு.சுரேஷ், மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் சு. சக்தியபாலகங்காதரணன், மாவட்ட மேலாளர் தாட்கோ சி.முருகவேல் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



**மயிலாடுதுறையில் மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் சார்பாக நடந்த வாக்கு திருட்டு தொடர்பாக நடந்த கையெழுத்து இயக்கத்தை எம்எல்ஏ ராஜகுமார் தலைமையில் முதல் கையொப்பமாக பாராளுமன்ற உறுப்பினர் சுதா துவக்கி வைத்தார்.**



**பெரம்பலூர் மாவட்டம் குரும்பலூரில் நடந்த நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமினை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேரில் பார்வையிட்டு நலத்திட்டஉதவிகளை வழங்கினார். இதில் கலெக்டர் மிருணாளினி, பிரபாகரன் எம்எல்ஏ,கலந்து கொண்டனர்.**



**தஞ்சாவூரில் நடந்த நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமினை கலெக்டர் பிரியங்கா பங்கஜம் துவக்கி வைத்து நலத்திட்டஉதவிகளை வழங்கினார். இதில் முரசொலி எம்பி, துரை.சந்திரசேகரன் எம்எல்ஏ, மேயர் சண்.ராமநாதன், துணை மேயர் அஞ்சுகம், வருவாய் கோட்டாட்சியர் நித்யா, மாநகராட்சி ஆணையர் கண்ணன் கலந்து கொண்டனர்.**

# மயிலாடுதுறையில் நடைபெற்ற ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு பொதுக்கூட்டம்: அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பங்கேற்பு



**மயிலாடுதுறை,செப்.23-**

மயிலாடுதுறையில் தமிழ்நாட்டை தலைகுனிய விட மாட்டோம் என்ற தலைப்பில் ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு பொதுக்கூட்டம் நடைபெற்றது. மயிலாடுதுறை மாவட்ட செயலாளர் நிவேதா முருகன் எம்எல்ஏ தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் பங்கேற்று சிறப்புரையாற்றி பேசுகையில்:- 43 லட்சம் பள்ளி குழந்தைகள் பயன்பெறக்கூடிய 2153 கோடி ரூபாயை தர ஒன்றிய அரசு மறுத்துள்ளது. ஒன்றிய அரசு புதிய கல்விக் கொள்கை மற்றும் மும்மொழி கொள்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துகிறது ஒன்றிய அரசின் அநீதிகளை எதிர்த்து தான் ஓரணியில் தமிழ்நாடு என்ற முழக்கத்தை நாம் முன்னெடுத்துள்ளோம். தொடர்ந்து தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம் என்ற உறுதிமொழியேற்றனர். பின்னர் மாற்றுகட்சியில் இருந்து திமுகவில் இணைந்தவர்களுக்கு அமைச்சர் மெய்யநாதன்' சால்வை அணிவித்து வரவேற்றார். இதில் சீர்காழி எம்எல்ஏ பன்னீர்செல்வம், நகர்மன்ற தலைவர் செல்வராஜ், மாநில மாவட்ட நகர பேரூர் கழக பொறுப்பாளர்கள், பொதுமக்கள் பெருந்திரளாக கலந்த கொண்டனர்

# திருவாரூர் மாவட்ட மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் வ.மோகனச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது



**திருவாரூர்,செப்.23-**

திருவாரூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் திங்கட்கிழமைதோறும் நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்றைய தினம் 22.09.2025 திருவாரூர் கலெக்டர் வ.மோகனச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், பொது மக்கள் பட்டா மாறுதல், புதிய குடும்ப அட்டை, ஆக்கிரமிப்பு அகற்றுதல், கல்விக்கடன், வீட்டுமனைப்பட்டா உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்த 306 மனுக்களை கலெக்டர் அவர்களிடம் அளித்தனர். பொதுமக்களிடம் விசாரித்து மனுக்களை பெற்றுக்கொண்ட கலெக்டர் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை வழங்கி குறித்த காலத்திற்குள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

அதனைத் தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், 6 பயனாளிகளுக்கு தலா ரூ.15,750- வீதம், ரூ.94,500- மதிப்பீட்டில், மடக்கு சக்கர நாற்காலிகளையும், மாவட்ட வழங்கல் துறையின் சார்பில் 7 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டையினையும், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 3 பயனாளிகளுக்கு தலா ரூ.6690 மதிப்பீட்டில் இலவச தையல் இயந்திரத்தினையும், 10 பயனாளிகளுக்கு நல வாரிய அட்டையினையும் கலெக்டர் வ.மோகனச்சந்திரன், வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில்மாவட்ட வருவாய் அலுவலர் கலைவாணி, தனி துணை கலெக்டர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) தையல்நாயகி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) சதீஷ்குமார், மாவட்ட வழங்கல் அலுவலர் செல்லபாண்டி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் அமுதா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர் உலகநாதன் உள்ளிட்ட பல்வேறு துறை அரசு உயர் அலுவலர்கள்; கலந்து கொண்டனர்.

# ஆயிரம் விளக்கு பகுதியில் கட்டிட வளாகத்தில் பணியாளர்களின் செல்போன்களை திருடியவர் கைது

**சென்னை செப் 23-**

சென்னை, நுங்கம்பாக்கம், ஹாடோஸ் சாலையில் உள்ள வணிக வளாகத்தில் கட்டுமானம் நடைபெற்று வரும் இடத்தில் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த நபர்கள் தங்கி வேலை செய்து வருவதாகவும், கடந்த 20.ந் தேதி அன்று இரவு யாரோ மர்ம நபர், மேற்படி கட்டுமானம் நடைபெறும் இடத்தில் நுழைந்து, அங்கு தூங்கிக் கொண்டிருந்த பீகார் மாநிலத்தைச் சேர்ந்த பணியாளர்களின் 4 செல்போன்களை திருடிச் சென்றதாகவும், மேற்கண்ட இடத்தின் கட்டுமான நிறுவன பொறுப்பாளர் பாபு என்பவர் ஆயிரம் விளக்கு காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

ஆயிரம் விளக்கு காவல் நிலைய குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி செல்போன் திருட்டு வழக்கில் சம்பந்தப்பட்ட கார்த்திக், என்பவரை கைது செய்தனர்.

விசாரணையில் மேற்படி நபர் சேத்துப்பட்டு பகுதியிலும் செல்போன் திருட்டில் ஈடுபட்டது தெரியவந்தது. அதன்பேரில் அவரிடமிருந்து மொத்தம் 5 செல்போன்கள் மீட்கப்பட்டது. 1 ஒயர் கட்டர் பறிமுதல் செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட எதிரி கார்த்திக் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at
Manimaran Printers
No. 1 Santhanapuram,
Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam,
Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

### பாகிஸ்தானுக்கு எதிரான வெற்றி:

# சூப்பர் 4 சுற்று புள்ளி பட்டியலில் முதலிடத்தை பிடித்தது இந்தியா



**துபாய், செப். 23-**

பாகிஸ்தானுக்கு எதிரான வெற்றி மூலம் சூப்பர் 4 சுற்று புள்ளி பட்டியலில் இந்திய அணி முதலிடத்தை பிடித்துள்ளது.

**இறுதிப்போட்டிக்கு...**

17-வது ஆசிய கோப்பை கிரிக்கெட் துபாய் மற்றும் அபுதாபியில் நடந்து வருகிறது. இதில் சூப்பர்4 சுற்றுக்கு வந்துள்ள நடப்பு சாம்பியன் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்காளதேசம் ஆகிய அணிகள் தங்களுக்குள் தலா ஒரு முறை மோத வேண்டும். இதன் முடிவில் டாப்-2 இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறும். இதில் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் இலங்கை வீழ்த்தி வங்காளதேசம் வெற்றி பெற்றது.

**2-வது ஆட்டத்தில்...**

இதனையடுத்து துபாயில் அரங்கேறிய சூப்பர் 4 சுற்றின் 2-வது ஆட்டத்தில் பரம எதிரிகளான இந்தியா-பாகிஸ்தான் அணிகள் கோதாவில் குதித்தன. இதில் இந்திய அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்நிலையில் சூப்பர்4 சுற்று புள்ளி பட்டியலில் அணிகளின் நிலை குறித்த தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியா மற்றும் வங்காளதேசம் தலா ஒரு வெற்றி பெற்றுள்ள நிலையில், ரன் ரேட் அடிப்படையில் இந்திய அணி முதலிடத்திலும், வங்காளதேசம் 2-வது இடத்திலும் உள்ளன. இன்னும் வெற்றி கணக்கை தொடங்காத இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகள் முறையே ரன் ரேட் அடிப்படையில் கடைசி 2 இடங்களில் உள்ளன.

**சூப்பர் 4 சுற்று புள்ளி பட்டியல்:**

1. இந்தியா - 2 புள்ளிகள் - +0.689.
2. வங்காளதேசம் - 2 புள்ளிகள் - +0.121.
3. இலங்கை - 0 புள்ளி - -0.121.
4. பாகிஸ்தான் - 0 புள்ளி - -0.689.

### சர்வதேச டி-20 கிரிக்கெட்டில்

# குறைந்த பந்துகளில் 50 சிக்சர்கள்: அபிஷேக் சர்மா உலக சாதனை..!



**துபாய், செப். 23-**

சர்வதேச டி20 கிரிக்கெட் போட்டியில் குறைந்த பந்துகளில் 50 சிக்சர்கள் அடித்து அபிஷேக் சர்மா உலக சாதனை படைத்துள்ளார். பாகிஸ்தானுக்கு எதிரான சூப்பர் 4 சுற்று ஆட்டத்தில் இந்த சாதனையை அவர் படைத்தார்.

**இந்தியா பந்துவீச்சு...**

17-வது ஆசிய கோப்பை கிரிக்கெட் துபாய் மற்றும் அபுதாபியில் நடந்து வருகிறது. இதில் சூப்பர்4 சுற்றுக்கு வந்துள்ள நடப்பு சாம்பியன் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்காளதேசம் ஆகிய அணிகள் தங்களுக்குள் தலா ஒரு முறை மோத வேண்டும். இதன் முடிவில் டாப்-2 இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறும். இந்த நிலையில் துபாயில் அரங்கேறிய சூப்பர்4 சுற்றின் 2-வது ஆட்டத்தில் பரம எதிரிகளான இந்தியா- பாகிஸ்தான் அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற இந்திய கேப்டன் சூர்யகுமார் யாதவ் முதலில் பந்து வீசுவதாக அறிவித்தார்.

**தலா ஒரு விக்கெட்...**

அதன்படி முதலில் பேட்டிங் செய்த பாகிஸ்தான் அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 171 ரன்கள் அடித்தது. அதிகபட்சமாக சகிப்சதா பர்ஹான் 58 ரன்கள் அடித்தார். இந்திய தரப்பில் ஷிவம் துபே 2 விக்கெட்டும், ஹர்திக் பாண்ட்யா, குல்தீப் யாதவ் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர். பின்னர் 172 ரன்கள் இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணி 18.5 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கு 174 ரன்கள் குவித்து 6 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

அதிகபட்சமாக அபிஷேக் சர்மா 74 ரன்களும், சுப்மன் கில் 47 ரன்களும் அடித்தனர். பாகிஸ்தான் தரப்பில் ஹாரிஸ் ரவூப் 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

**புதிய உலக சாதனை...**

அபிஷேக் சர்மா ஆட்ட நாயகனாக தேர்வு செய்யப்பட்டார். இந்த ஆட்டத்தில் மொத்தம் 5 சிக்சர்கள் விளாசிய அபிஷேக் சர்மா 2 சிக்சர்கள் அடித்திருந்தபோது சர்வதேச டி20 கிரிக்கெட்டில் 50 சிக்சர்கள் மைல்கல்லை எட்டினார். இந்த 50 சிக்சர்களை வெறும் 331 பந்துகளில் அடித்துள்ளார். இதன் மூலம் சர்வதேச டி20 கிரிக்கெட் வரலாற்றில் குறைந்த பந்துகளில் 50 சிக்சர்கள் அடித்த வீரர் என்ற உலக சாதனையை அபிஷேக் சர்மா படைத்துள்ளார்.

**குறைந்த பந்துகளில் 50 சிக்சர்கள் பட்டியல்:**

1. அபிஷேக் சர்மா - 331 பந்துகள்.
2. எவின் லூவிஸ் - 366 பந்துகள்.
3. ஆந்த்ரே ரசல் - 409 பந்துகள்.
4. ஹஸ்ரத்துல்லாஹ் ஜசாயி - 492 பந்துகள்.
5. சூர்யகுமார் யாதவ் - 510 பந்துகள் .

### பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில்

# கில் - அபிஷேக் சர்மா ஜோடி சாதனை



**துபாய், செப். 23-**

இந்திய அணியின் தொடக்க ஜோடியான சுப்மன் கில் - அபிஷேக் சர்மா ஜோடி முதல் விக்கெட்டுக்கு 105 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்து அசத்தியது. இதன் மூலம் டி20 கிரிக்கெட்டில் பாகிஸ்தானுக்கு எதிராக அதிக ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்த தொடக்க ஜோடி என்ற மாபெரும் சாதனையை கில் - அபிஷேர் சர்மா படைத்துள்ளனர்.

**தலா ஒரு முறை...**

17-வது ஆசிய கோப்பை கிரிக்கெட் துபாய் மற்றும் அபுதாபியில் நடந்து வருகிறது. இதில் சூப்பர்4 சுற்றுக்கு வந்துள்ள நடப்பு சாம்பியன் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்காளதேசம் ஆகிய அணிகள் தங்களுக்குள் தலா ஒரு முறை மோத வேண்டும். இதன் முடிவில் டாப்-2 இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறும். இந்த நிலையில் துபாயில் அரங்கேறிய சூப்பர்4 சுற்றின் 2-வது ஆட்டத்தில் பரம எதிரிகளான இந்தியா- பாகிஸ்தான் அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற இந்திய கேப்டன் சூர்யகுமார் யாதவ் முதலில் பந்து வீசுவதாக அறிவித்தார்.

**174 ரன்கள் குவித்து...**

அதன்படி முதலில் பேட்டிங் செய்த பாகிஸ்தான் அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 171 ரன்கள் அடித்தது. அதிகபட்சமாக சகிப்சதா பர்ஹான் 58 ரன்கள் அடித்தார். இந்திய தரப்பில் ஷிவம் துபே 2 விக்கெட்டும், ஹர்திக் பாண்ட்யா, குல்தீப் யாதவ் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர். பின்னர் 172 ரன்கள் இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணி 18.5 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கு 174 ரன்கள் குவித்து 6 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. அதிகபட்சமாக அபிஷேக் சர்மா 74 ரன்களும், சுப்மன் கில் 47 ரன்களும் அடித்தனர். பாகிஸ்தான் தரப்பில் ஹாரிஸ் ரவூப் 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

**முதல் விக்கெட்டுக்கு...**

அபிஷேக் சர்மா ஆட்ட நாயகனாக தேர்வு செய்யப்பட்டார். இந்த ஆட்டத்தில் இந்திய அணியின் தொடக்க ஜோடியான சுப்மன் கில் - அபிஷேக் சர்மா ஜோடி முதல் விக்கெட்டுக்கு 105 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்து அசத்தியது. இதன் மூலம் டி20 கிரிக்கெட்டில் பாகிஸ்தானுக்கு எதிராக அதிக ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்த தொடக்க ஜோடி என்ற மாபெரும் சாதனையை கில் - அபிஷேர் சர்மா படைத்துள்ளனர். இதற்கு முன்னர் கம்பீர் - ரகானே ஜோடி 77 ரன்கள் அடித்திருந்ததே அதிகபட்சமாக இருந்தது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# பிலிப்பைன்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சருடன் ஜெய்சங்கர் சந்திப்பு

**வாஷிங்டன், செப். 23-**

பிலிப்பைன்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சருடன் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் சந்தித்து பேசினார்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் நேற்று முன்தினம் அமெரிக்கா சென்றார். அவர் நியூயார்க்கில் நடைபெறும் ஐ.நா. பொதுச்சபை கூட்டம் பங்கேற்கிறார். இந்நிலையில், பிலிப்பைன்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சர் டெஸ் லசரொவை நியூயார்க்கில் ஜெய்சங்கர் சந்தித்தார்.

இந்த சந்திப்பிபோது, இருநாட்டு உறவு, பாதுகாப்பு, அரசியல் ஒத்துழைப்பு உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இரு நாட்டு தலைவர்களும் ஆலோசனை நடத்தினர். முன்னதாக, பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி மார்கஸ் கடந்த மாதம் இந்தியா வந்திருந்தார். அவர் பிரதமர் மோடியை சந்தித்து பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### டி.ஐ.ஜி. வருண்குமார் வழக்கில்

# சீமானுக்கு விதிக்கப்பட்ட தடையை நீட்டித்த ஐகோர்ட்

**சென்னை, செப். 23-**

டி.ஐ.ஜி. வருண்குமாருக்கு எதிராக அவதூறு கருத்துகளை தெரிவிக்க நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானுக்கு விதிக்கப்பட்ட இடைக்கால தடையை சென்னை உயர் நீதிமன்றம் நீடித்து உத்தரவிட்டுள்ளது.

நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், ஐபிஎஸ். அதிகாரி வருண்குமார் ஆகியோர் இடையே அண்மையில் கருத்து மோதல்கள் ஏற்பட்டது. இருவரும் பரஸ்பரம் மாறி மாறி கருத்துகளை தெரிவித்து வந்தனர். இது தொடர்பான வழக்கு திருச்சி நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இந்த நிலையில், தனக்கு எதிராக பொது வெளியில் சீமான் ஆதாரம் இல்லாமல் அவதூறு கருத்துகளை தெரிவிப்பதால் தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளதால், எதிர்காலத்தில் தனக்கு எதிரான அவதூறான, ஆதாரமில்லாத கருத்துகளை தெரிவிக்க சீமானுக்கு தடை விதிக்கக் கோரி, ஐ.பி.எஸ். அதிகாரி வருண்குமார் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

மேலும் அந்த மனுவில், ரூ.2 கோடியே 10 லட்சம் மான நஷ்ட ஈடு வழங்க வேண்டும் எனவும் கோரியுள்ளார். இந்த வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், வருண்குமாருக்கு எதிராக, சீமான் பேச இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டார். மேலும், மனுவிற்கு பதில் அளிக்க உத்தரவிட்டு, விசாரணை ஒத்திவைக்கப் பட்டிருந்தது. இந்த நிலையில், வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது சீமான் தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்படாததால், வழக்கை அடுத்த மாதம் 15 ஆம் தேதி ஒத்திவைத்த நீதிபதி தடையை நீட்டித்து உத்தரவிட்டுள்ளார்

## ஹர்திக் பாண்ட்யா சாதனை



ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடரில் துபாயில் நடைபெற்ற சூப்பர்4 சுற்றின் 2-வது ஆட்டத்தில் பரம எதிரிகளான இந்தியா- பாகிஸ்தான் அணிகள் மோதின. இதில் இந்திய அணி வெற்றிப்பெற்றது. இந்திய தரப்பில் ஷிவம் துபே 2 விக்கெட்டும், ஹர்திக் பாண்ட்யா, குல்தீப் யாதவ் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

டி20 கிரிக்கெட்டில் இந்த ஆட்டத்தில் கைப்பற்றிய விக்கெட்டையும் சேர்த்து ஹர்திக் பாண்ட்யா பாகிஸ்தானுக்கு எதிராக 15 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார். இதன் மூலம் இந்தியா - பாகிஸ்தான் இடையிலான டி20 போட்டிகளில் அதிக விக்கெட் கைப்பற்றிய வீரர் என்ற மாபெரும் சாதனையை அவர் படைத்துள்ளார்.

## உத்தப்பா விசாரணைக்கு ஆஜர்

ஆன்லைன் சூதாட்ட செயலி பண மோசடி வழக்கில் இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர்களான யுவராஜ் சிங் மற்றும் ராபின் உத்தப்பா ஆகியோருக்கு அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியது. சூதாட்ட செயலியை விளம்பரப்படுத்துவதன் மூலம் பெரிய அளவிலான பரிவர்த்தனைகள் செய்யப்பட்டதா மற்றும் அது பணமோசடியுடன் தொடர்புடையதா என்ற கோணத்தில் அமலாக்கத்துறை விசாரித்து வருகிறது. மேலும் முதலீட்டாளர்களை கோடிக்கணக்கான ரூபாய் ஏமாற்றி கணிசமான வரிகளை ஏய்ப்பு செய்ததாக சந்தேகிக்கப்படும் சட்டவிரோத சூதாட்ட செயலிகள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

அந்த வரிசையில் தற்போது 'ஒன்எக்ஸ்பெட்' (1xBet) என்ற சட்டவிரோத பந்தய செயலியுடன் தொடர்புடைய பணமோசடி வழக்கின் விசாரணையின் பகுதியாக அமலாக்க இயக்குநரகம் யுவராஜ் மற்றும் ராபின் உத்தப்பாவுக்கு சம்மன் அனுப்பியது. இவர்களில் ராபின் உத்தப்பாவை இன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியிருந்தது. அதன்படி உத்தப்பா நேற்று காலை 11 மணியளவில் அமலாக்கத்துறை முன் விசாரணைக்கு ஆஜரானார்.

### எங்களுக்கு இணையான அணி இல்லை:

# பாகிஸ்தான் அணி குறித்து சூர்யகுமார் யாதவ் கருத்து

**துபாய், செப். 23-**

இந்தியா - பாகிஸ்தான் இடையேயான போட்டியை இனி 'ரைவல்ரி' என அழைக்காதீர்கள் என்று இந்திய கேப்டன் சூர்யகுமார் யாதவ் தெரிவித்துள்ளார்.

**கைக்குலுக்காமல்...**

ஆசியக் கோப்பையின் சூப்பர் 4 சுற்றில் பாகிஸ்தான் அணியை 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்திய அணி அபார வெற்றியை ஞாயிற்றுக்கிழமை பதிவு செய்தது. முதலில் பேட்டிங் செய்த பாகிஸ்தான் அணி 171 ரன்கள் குவித்த நிலையில், தொடர்ந்து விளையாடிய இந்திய அணி இலக்கை 19 வது ஓவரில் அடைந்து வெற்றி பெற்றது. கடந்த லீக் போட்டியின் போது, ஆட்டத்துக்கு பிறகு பாகிஸ்தான் வீரர்களுடன் இந்திய வீரர்கள் கைக்குலுக்காமல் சென்றது சர்ச்சையான நிலையில், ஆட்டத்துக்கு பிறகும் இந்திய அணியினர் கைக்குலுக்கவில்லை.

**நிறுத்த வேண்டும்...**

இந்த நிலையில், ஆட்டத்துக்கு பிறகு செய்தியாளர்களை சந்தித்த சூர்யகுமார் யாதவ், இனிமேல் இந்தியா - பாகிஸ்தான் போட்டியை 'ரைவல்ரி' என அழைக்காதீர்கள் என்று சிரித்தபடி கூறினார். அப்போது அவர் பேசியதாவது: "இனியும் இந்தியா - பாகிஸ்தான் போட்டியை ரைவல்ரியாக நினைத்துக் கேள்வி கேட்பதை நிறுத்த வேண்டும் என நான் நினைக்கிறேன். ஏனெனில் ரைவல்ரி என்பது இரு அணிகள் 15 ஆட்டங்களில் விளையாடி, 8 - 7 என்ற வெற்றியை பதிவு செய்திருந்தால் ரைவல்ரி என்று அழைப்பதில் மாற்று கருத்து இல்லை. ஆனால், 3-0, 10-1 என்ற வெற்றி கணக்கில் இருக்கும் இரு அணிகளை ரைவல்ரி என அழைப்பது சரியல்ல. இது வெறும் போட்டி மட்டும்தான்" எனக் குறிப்பிட்டார்.



முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று தலைமைச்செயலகத்தில், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி கடற்படைப் பகுதிகளின் கடற்படை அலுவலர் ரியர் அட்மிரல் சதீஷ் ஷெனாய் சந்தித்து பேசினார்.

# விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் 4 பேருக்கு பணி நியமன ஆணைகள்

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

**சென்னை, செப். 23-**

விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் விளையாட்டு வீரர்கள் 4 பேருக்கு பணி நியமன ஆணையை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு 3 சதவிகித விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் அரசுத் துறைகள் அல்லது பொதுத்துறை நிறுவனங்களில் வேலை வாய்ப்பு வழங்கிடும் வகையில் 4 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பணி நியமன ஆணைகளை வழங்கினார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;-

விளையாட்டு துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

மேலும், மாநிலத்தில் அதிநவீன விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை பெருநிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட நன்கொடையாளர்களிடமிருந்து நன்கொடை பெற்று ஏற்படுத்திட "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை"யை உருவாக்கியது. சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்திட தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் 2024-25ஆம் ஆண்டிற்கான இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் மானியக் கோரிக்கையில், விளையாட்டு வீரர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, சர்வதேச மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டின் சார்பாக பங்கேற்று வெற்றி பெற்ற 100 வீரர் / வீராங்கனைகளுக்கு 3 சதவிகித விளையாட்டு இட ஒதுக்கீட்டின் கீழ் பணி ஆணை வழங்கப்படும் என்று அறிவித்தார்.

அதனடிப்படையில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் சர்வதேச போட்டிகளான ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள், காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள், ஆசிய விளையாட்டுப் போட்டிகள், சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச விளையாட்டு கூட்டமைப்பால் நடத்தப்படும் உலக சாம்பியன்ஷிப் போட்டிகள், சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச விளையாட்டு கூட்டமைப்பின் கீழ் நடத்தப்படும் காமன்வெல்த் சாம்பியன்ஷிப் போட்டிகள், சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச பள்ளி விளையாட்டு கூட்டமைப்பின் கீழ் ஆண்டுதோறும் நடத்தப்படும் ஆசிய சாம்பியன்ஷிப் போட்டிகள்,

தெற்காசிய கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகள், பாரா ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள், ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகள், சர்வதேச பார்வையற்றோர் விளையாட்டு சங்கம் காது கேளாதோருக்கான சர்வதேச விளையாட்டுக் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட உலக விளையாட்டுகள் மற்றும் காது கேளாதோர் விளையாட்டுகள், தேசிய விளையாட்டுப் போட்டிகள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய விளையாட்டு கூட்டமைப்புகளால் நடத்தப்படும் தேசிய சாம்பியன்ஷிப் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு (மாற்றுத் திறனாளி வீரர்கள் உட்பட) அரசுத்துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் 3 சதவிகித விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் வேலை வாய்ப்புகள் வழங்கப்படும்.

அதன்படி, முதற்கட்டமாக, சர்வதேச மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற தமிழ்நாட்டைச் சார்ந்த 84 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு 3 சதவிகித விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் பள்ளிக்கல்வித் துறை, தொழில் துறை, எரிசக்தித் துறை, கூட்டுறவுத் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நெடுஞ்சாலைத் துறை போன்ற 14 அரசுத் துறைகளில் இளநிலை உதவியாளர், உதவியாளர், இளநிலை வரைவு அலுவலர், கூட்டுறவு சங்கங்களில் இளநிலை மற்றும் முதுநிலை ஆய்வாளர் போன்ற பல்வேறு பணியிடங்களுக்கான பணி நியமன ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் 23.12.2024 அன்று வழங்கினார்.

அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு முதல்வர் இன்றைய தினம், சீனாவின் ஹாங்ஷோவில் நடைபெற்ற 19-வது ஆசிய விளையாட்டுப் போட்டியில் 2-வது இடம் பெற்ற சதுரங்க விளையாட்டு வீராங்கனை ஆர்.வைஷாலிக்கு தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தில் இளநிலை அலுவலர் (தரம் III) பணியிடத்திற்கும், நேபாள நாட்டின் போக்ராவில் நடைபெற்ற 13-வது தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் முதல் இடம் பெற்ற கால்பந்து வீராங்கனை கே. சுமித்ராவுக்கு தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தில் கணக்காளர் பணியிடத்திற்கும், நேபாள நாட்டின் போக்ராவில் நடைபெற்ற 13-வது தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் முதல் இடம் பெற்ற கூடைப் பந்து வீராங்கனை எஸ்.சத்யாவுக்கு தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கழகத்தில் மார்க்கெட்டிங் நிர்வாகி பணியிடத்திற்கும், சீனாவின் ஹாங்ஷோவில் நடைபெற்ற 19-வது ஆசிய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்ற பாய்மர படகு போட்டி வீரர் பி. சித்ரேஷ் தத்தாவுக்கு சிப்காட் நிறுவனத்தில் உதவி அலுவலர் பணியிடத்திற்கும், என 4 விளையாட்டு வீரர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி, வாழ்த்தினார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில் சர்வதேச அளவில் தமிழ்நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்திய மற்றும் தேசிய, மாநில அளவில் சிறந்து விளங்கிய விளையாட்டு வீரர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சத்தீஷ்கர்: 2 நக்சலைட்டுகள் சுட்டுக்கொலை

**ராய்ப்பூர், செப். 23-**

சத்தீஷ்கரில் 2 நக்சலைட்டுகளை பாதுகாப்புப்படையினர் சுட்டு கொன்றனர்.

சத்தீஷ்கர், மராட்டியம், ஜார்க்கண்ட், ஒடிசா, மத்திய பிரதேசம் உள்பட பல்வேறு மாநிலங்களில் நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகள் ஆதிக்கம் உள்ளது. நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகளை ஒடுக்கும் நடவடிக்கையில் மாநில சிறப்பு போலீஸ் படையுடன், மத்திய பாதுகாப்புப்படையினர் ஈடுபட்டு வருகின்றனர். அடுத்த ஆண்டு மார்ச் 31ம் தேதிக்குள் நாட்டில் நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகளை முழுவதும் ஒழிக்க மத்திய அரசு காலக்கெடு நிர்ணயித்துள்ளது.

இந்நிலையில், சத்தீஷ்கர் மாநிலம் நாராயண்பூர் மாவட்டம் அகுஜ்மத் பகுதியில் உள்ள வனப்பகுதியில் நக்சலைட்டுகள் பதுங்கி இருப்பதாக பாதுகாப்புப்படையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. தகவலின் அடிப்படையில் அப்பகுதிக்கு விரைந்து சென்ற பாதுகாப்புப்படையினர் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது அங்கு பதுங்கி இருந்த நக்சலைட்டுகள் திடீரென துப்பாக்கி சூடு தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலுக்கு பாதுகாப்புப்படையினர் பதிலடி தாக்குதல் நடத்தினர். பாதுகாப்புப்படையினர் நடத்திய துப்பாக்கி சூடு தாக்குதலில் 2 நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். என்கவுன்டர் நடந்த பகுதியில் துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று 13 பேருக்கு நலத்திட்ட உதவிகள்

## கலெக்டர் ச.கந்தசாமி வழங்கினார்



**ஈரோடு,செப்.23-**

ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் கலெக்டர் ச.கந்தசாமி தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, விதவை உதவித்தொகை, கருணை அடிப்படையில் வேலை, மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, கலைஞரின் கனவு இல்லம், இலவச வீட்டுமனை பட்டா, பட்டா மாறுதல், ஆக்கிரமிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் என மொத்தம் 318 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை கலெக்டர் பெற்று உரிய துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார். மேலும், முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, கலெக்டர் , மாவட்ட பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் விலையில்லா சலவைப்பெட்டிகள் தலா ரூ.8,781/- வீதம் 10 பயனாளிகளுக்கு ரூ.87,810/- மதிப்பீட்டிலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் விலையில்லா தையல் இயந்திரங்கள் ரூ.6,690/- வீதம் 2 பயனாளிகளுக்கு ரூ.13,380/-மதிப்பீட்டிலும் மற்றும் கருணை அடிப்படையில் 1 நபருக்கும் சத்தியமங்கலம் சமூக நீதி பள்ளி மாணவியர் விடுதியில் சமையலராக பணி நியமனம் செய்யப்பட்டதற்கான ஆணையினையும் என மொத்தம் ரூ.1,01,190/- மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மேலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் மாரத்தான் மற்றும் தடகள அசோசியேசன் சார்பில் நடைபெற்ற மாவட்ட அளவிலான மூத்தோர் தடகள போட்டிகளில், ஈரோடு மாவட்டம் சார்பாக கலந்து கொண்டு, ஈட்டி எறிதல் போட்டியில் முதல் பரிசு, வட்டு எறிதல் போட்டியில் மூன்றாம் பரிசு மற்றும் உயரம் தாண்டுதலில் மூன்றாம் பரிசு பெற்ற ஆதி திராவிடர் நலத்துறையின் இளநிலை பொறியாளர் த.மலர்விழி தான் வென்ற பதக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழை கலெக்டர் அவர்களிடம் காண்பித்து வாழ்த்து பெற்றார்.

இக் கூட் டத் தில், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், தனித் துணை ஆட்சியர் (ச.பா.தி) செல்வராஜ், மாவட்ட வழங்கல் அலுவலர் ராம்குமார், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் நூர்ஜஹான் உட்பட அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நீலகிரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக்கூட்டம்

## மாவட்ட கண்காணிப்பு அலுவலர் வினீத் தலைமையில் நடைபெற்றது



**ஊட்டி, செப்.23-**

நீலகிரி மாவட்ட ஆட்சியர்; அலுவலகத்தில், பல்வேறு துறைகளின் சார்பில், மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து, தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டம் (திட்ட இயக்குநர்) ஃ மாவட்ட கண்காணிப்பு அலுவலர் டாக்டர் சு.வினீத்;, தலைமையில், மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில், அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

நீலகிரி மாவட்டத்தில், நலன் காக்கும் ஸ்டாலின் முகாம் சிறந்த முறையில் நடைபெற்று வருகிறது. இதற்கு எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

பின்னர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் தெரிவித்ததாவது :-

தமிழ்நாடு முதலமைச்சர், பொது மக்களின் முன்னேற்றத்திற்;காக பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறாhள். தமிழ்நாடு அரசு பல்வேறு துறைகளின் சார்பில் செயல்படுத்தி வரும் அரசின் திட்டங்கள் பயனாளிகளுக்கு சென்று சேருவதை கண்காணிக்கும் வகையில், மாவட்டந்தோறும் கண்காணிப்பு அலுவலர்களை தமிழ்நாடு அரசு நியமனம் செய்துள்ளது.

அதனடிப்படையில் இன்றைய தினம், நீலகிரி மாவட்டத்தில் நடைபெற்று வரும் உங்களுடன் ஸ்டாலின் முகாம், தாயுமானவர் திட்டம், அன்பு கரங்கள் ஆகிய திட்டங்கள் குறித்தும், பள்ளிக்கல்;வித்துறையின் சார்பில், 10 மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற பள்ளி மாணவ, மாணவிகளின் விவரம் குறித்தும், நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்ட பணிகளின் முன்னேற்றம் குறித்தும், இதேபோன்று ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் கலைஞர் கனவு இல்லம் குடியிருப்பு கட்டுமான பணிகளின் விவரம் குறித்தும், முதல்வரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ், நடைபெற்று வரும் சாலை பணிகள் குறித்தும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் நடைபெற்று வரும் அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டுமான பணிகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம், தற்போதைய நிலை குறித்தும், நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டப்பணிகள் அனைத்தையும் விரைந்து முடிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு அரசின் திட்டங்கள் அனைத்தும் பொதுமக்களுக்கு சென்று சேர்க்கும் வகையில், துறை அலுவலர்கள் பணியாற்ற வேண்டும் என மாவட்ட கண்காணிப்பு அலுவலர் தெரிவித்தார்.

முன்னதாக, மாவட்ட கண்காணிப்பு அலுவலர், மாவட்ட கலெக்டர் ஆகியோர், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில், மாற்றுத் திறனாளிகளுக்கான செயற்கைகால் வழங்கும் திட்டத்தின் கீழ்; 9 பயனாளிகளுக்கு ரூ.8.34 இலட்சம் மதிப்பீட்டில் செயற்கால்களை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அபிலாஷா கௌர், குன்னூர் சார் ஆட்சியர் சங்கீதா, மாவட்ட வன அலுவலர் (நீலகிரி கோட்டம்) கௌதம் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி நீலகிரி மாவட்டம் வருகை

## குன்னூர், ஊட்டியில் இன்று பிரச்சாரம் செய்கிறார்



**ஊட்டி, செப்.23-**

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி இரண்டு நாட்கள் நீலகிரி மாவட்டத்தில் பிரச்சாரம் செய்கிறார். குன்னூர் மற்றும் ஊட்டியில் இன்று பிரச்சாரம் செய்கிறார். நாளை (24-ந் தேதி) கூடலூரில் பிரச்சாரம் செய்கிறார்.

2026ம் ஆண்டு நடைபெவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு அதிமுக பொதுச்செயலாளரும், முன்னாள் முதலமைச்சரும், சட்டமன்ற எதிர்கட்சி தலைவருமான எடப்பாடி கே.பழனிசாமி மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம் என்ற பேரில் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார். கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில்; பிரச்சாரத்தை தொடங்கிய அவர் இன்று மற்றும் நாளை(23, 24 தேதிகளில்) நீலகிரி மாவட்டத்தில் பிரச்சாரம் செய்கிறார். அதன்படி இன்று காலை மேட்டுப்பாளையத்திலிருந்து புறப்படும் எடப்பாடி பழனிசாமி, பகல் 12 மணியளவில் குன்னூர் பேருந்து நிலைய சந்திப்பில் பிரச்சாரம் செய்கிறார். பின்னர், அங்கிருந்து புறப்பட்டு ஊட்டி வருகிறார். ஊட்டியில் மதியம் 1 மணியளவில் ஏடிசி சுதந்திர திடல் பகுதியில் திரண்டிருக்கும் மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்கிறார். பிரச்சாரத்தை முடித்துக் கொண்டு மதியம் ஜெம் பார்க் தனியார் ஹோட்டலில் மதிய உணவு உட்கொள்கிறார். அங்கேயே மாலை 4 மணிக்கு சமுதாய அமைப்பு தலைவர்கள், விவசாயிகள், வியாபாரிகளை சந்தித்து அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிகிறார். பின்னர் மாலை ஊட்டியிலிருந்து, கூடலூர் புறப்படுகிறார். இரவு அங்கு தங்கும் அவர் நாளை(24-ந் தேதி) காலை 10 மணிக்கு விவசாயிகள் மற்றும் வியாபாரிகளை சந்திக்கிறார். பகல் 11.15 மணியளவில் கூடலூர் பேருந்து நிலைய பகுதியில் பொதுமக்கள் மத்தியில் பேசுகிறார். கூடலூரில் பிரச்சாரத்தை முடித்துக் கொண்டு மதியம் 2 மணியளவில் ஊட்டியில் அதே ஓட்டலில் மதிய உணவு உட்கொள்ளுகிறார். அதன் பின்னர் நீலகிரி பிரச்சார சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு மேட்டுப்பாளையம் புறப்பட்டு செல்கிறார்.அ.தி.மு.க. பொது செயலாளர் நீலகிரி வருகையையொட்டி, அவரை வரவேற்க நீலகிரி மாவட்ட அதிமுகவினர் தீவிரமான ஏற்பாடுகளை செய்துள்ளனர். சாலைகள் முழுவதும் கட்சிக்கொடிகள் கட்டப்பட்டு ஊட்டி நகரமே விழாக்கோலம் பூண்டுள்ளது.

# ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பாக கையெழுத்து இயக்கம்



**ஈரோடு செப் 23-**

ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பாக பாசிச பாஜக மோடி அரசும் இந்திய தேர்தல் ஆணையமும் இணைந்து நடத்தி 2024 பாராளுமன்றத் தேர்தலில் வாக்குத்திருட்டு (Vote chori) நடத்தி வெற்றி பெற்றதை கண்டித்து ஈரோட்டில் மாபெரும் கையெழுத்து இயக்கம் நேற்று கருங்கல்பாளையம் உத்தமர் காந்தியடிகள் சிலை அருகே ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் டி.திருச்செல்வம் தலைமையில் மொடக்குறிச்சி முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் தமிழ்நாடு சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினருமான ஆர் எம் பழனிசாமி வாக்குத்திருட்டு நடத்தி பாசிச பாஜக மோடி அரசும் இந்திய தேர்தல் ஆணையம் வெற்றி பெற்றதை கண்டித்து முதல் கையெழுத்திட்டு நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்

இந்நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்ட தலைவர் ஈ பி ரவி, மாவட்ட துணை தலைவர் பா ராஜேஷ் ராஜப்பா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வில் மண்டல தலைவர்களான ஆர் விஜயபாஸ்கர், எச் எம் ஜாபர் சாதிக், சிறுபான்மை துறை மாநில முதன்மை துணைத் தலைவர் எம் ஜவஹர் அலி, தமிழ்நாடு தொழிலாளர் காங்கிரஸ்(டி சி டி யு) மாநில துணைத்தலைவர் குளம் எம் ராஜேந்திரன், மாவட்டத் துணைத் தலைவர்களான கே புனிதன், , ஈரோடு மாவட்ட காங்கிரஸ் ஊடக பிரிவு தலைவர் ம.முகமது அர்சத், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் சேவா தளம் தலைவர் எஸ் முகமது யூசுப், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை தலைவர் இப்ராஹிம், துணைத் தலைவர் கே என் பாஷா, மற்றும் பலர் திரளாக கலந்து கொண்டு அருகில் உள்ள கடைகள் வீடுகளில் வாக்காளர்கள் இடம் கையெழுத்து வாங்கினார்கள்.

ஊட்டி தாவரவியல் பூங்கா பகுதியில்

# வளர்ப்பு நாய்களை வேட்டையாடிய சிறுத்தையை பிடிக்க கூண்டு வைப்பு



**ஊட்டி, செப், 23-**

ஊட்டி அரசு தாவரவியல் பூங்கா மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் 20-க்கும் மேற்பட்ட வளர்ப்பு நாய்கள் மற்றும் எருமைக் கன்றுகளை வேட்டையாடிய சிறுத்தையை பிடிக்க கூண்டு வைக்கப்பட்டு உள்ளது.

நீலகிரி மாவட்டம் முழுவதும் கடந்த சில ஆண்டுகளாக வனப்பகுதியில் இருந்து வெளியேறும் வன விலங்குகள் ஊருக்குள் புகுந்து மனித- வனவிலங்கு மோதல் ஏற்படுகிறது. மேலும் ஊருக்குள் வரும் மன விலங்குகள் இங்குள்ள உணவுகளை குப்பைத் தொட்டியில் சாப்பிட்டு பழகுவதாலும் இங்கு உள்ள கால்நடைகளை வேட்டையாடுவதாலும் மீண்டும் வனப்பகுதிக்குள் செல்வதில்லை.

ஊட்டி நகரில் சமீப காலங்களாக கரடி மற்றும் சிறுத்தைகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுகிறது. இரவு நேரத்தில் வனப்பகுதியில் இருந்து நகருக்குள் வரும் வனவிலங்குகளால் பொதுமக்கள் அச்சமடைந்து வரும் நிலையில் பிரசித்தி பெற்ற அரசு தாவரவியல் பூங்கா மற்றும் அதனை சுற்றியுள்ள கார்டன் மந்து, கிளன்ராக் காலனி பகுதிகளில் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக இரண்டு சிறுத்தைகள் உலா வருகின்றன.

இந்த சிறுத்தைகள் 20-க்கும் மேற்பட்ட வளர்ப்பு நாய்களையும், 10-க்கும்; மேற்பட்ட தோடர் எருமை கன்று குட்டிகளையும் தொடர்ந்து வேட்டையாடியுள்ளன. மேலும் இரவு நேரங்களில் தாவரவியல் பூங்கா அருகே உள்ள தோடர் பழங்குடி கிராம பகுதிக்கு வந்து அமர்ந்து கொள்வதால் பொதுமக்கள் அச்சமடைந்தனர்.

இதனையடுத்து இந்த சிறுத்தைகளை பிடிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்ததை அடுத்து தற்போது ஊட்டி வடக்கு சரக வனத்துறையினர் சிறுத்தைகளை பிடிக்க கூண்டு வைத்து கண்காணித்து வருகின்றனர்.

தொடர்ந்து 5-க்கும் மேற்பட்ட இடங்களில் கண்காணிப்பு கேமிரா பொருத்தியுள்ளனர். கூண்டிற்குள் ஆடு கட்டி வைத்துள்ள நிலையில் அந்த சிறுத்தைகள் நாய்களை மட்டுமே வேட்டையாடுவதால் நாயை கூண்டில் வைத்தால் விரைவில் சிறுத்தைகள் கூண்டில் சிக்கும் என பொது மக்கள் தெரிவித்துள்ளனர். ஆகையால் ஊட்டி நகரில் வளர்ப்பு நாய்களை வேட்டையாடி வரும் சிறுத்தை விரைவில் கூண்டில் பிடிபடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தின பூமி
நாளிதழில்
விளம்பரம்
செய்து
பயன்
பெறுங்கள்

### நகை ஏல அறிவிப்பு

மாயவரம் பெனிபிட் பண்ட் நிதி லிட்., CIN: U67190TN2016PLC103883 R0:3/46-B நாராயணசாமி காம்ப்ளக்ஸ், மெயின் ரோடு, நீடூர். மற்றும் அதன் கிளைகள் மயிலாடுதுறை, கும்பகோணம், திருவாரூர், பொறையார். கடந்த 28.02.2024 வரை அடகு வைத்து மீட்கப்படாத காலம் கடந்த பவுன் வகையறாக்களை இயக்குனர்களின் குழு உத்தரவுபடி வரும் 04.10.2025 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு என்னால் பதிவு அலுவலகத்தில் பகிரங்க ஏலம் விடப்படும். இந்த அறிவிப்பு நகை அடகு வைத்தவர்களுக்கும் இறந்தவர்களின் வாரிசுகளுக்கும் வெளிநாடு சென்றவர்களுக்கும் பொருந்தும்.

**M.சேதுராமன்,**
திருவாரூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்ட ஏலதாரர், திருவாரூர்.

### வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கும்பகோணம்
த.ப. 425/2025
நாள் : 17.07.2025

கணேசன்,
த/பெ.கோவிந்தசாமி,
2/3, கும்பேஸ்வரர் திருமஞ்சன வீதி, கும்பகோணம்.
– மனுதாரர்
– எதிர் –
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் கும்பகோணம்.
– எதிர்மனுதாரார்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தாயார் “உண்ணாமலை” என்பவர் கடந்த 03.05.2004 அன்று மேற்படி முகவரியில் இறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

கணேசன்,
மனுதாரர், கும்பகோணம்.

### உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதி மன்றம், வருவாய் கோட்டாட்சியர், வேதாரண்யம்,
ந.க.எண் 2293/2025/அ6
ஓ.மு.எண் 1027/2025/ஆ2 (e- 3634)

முருகராஜா, த/பெ.வீராசாமி,
20,மெயின்ரோடு,
பிரிஞ்சிமூலை கிராமம்,
தலைஞாயிறு பேரூராட்சி,
வேதாரண்யம் வட்டம்,
நாகப்பட்டினம் மாவட்டம்.
...மனுதாரர்
உயர்திரு. வட்டாட்சியர், அவர்கள், வேதாரண்யம் ....எதிர்மனுதாரர்

## அறிவிப்பு

மேற்படி முகவரியில் வசித்து வரும் மனுதாரர் முருகராஜா என்பவர் கடந்த 05.03.1973-ம் தேதி தான் பிறந்த விபரத்தை பதிவு செய்திட கோரி வேதாரண்யம் கோட்டாட்சியர் அவர்களிடம் மனு அளித்துள்ளார் இந்த மனுவின் மீது யாருக்கேனும் ஆட்சேபனை ஏதாவது இருப்பின் பதினைந்து நாட்களுக்குள் தங்களது ஆட்சேபணைகளை வேதாரண்யம் வட்டாட்சியரிடம் தெரிவிக்கும்படி கேட்டு கொள்ளப்படுகிறது.

மனுதாரர்: முருகராஜா,
த/பெ.வீராசாமி, 20,மெயின்ரோடு,
பிரிஞ்சிமூலை கிராமம்,
தலைஞாயிறு பேரூராட்சி,
வேதாரண்யம் வட்டம்.

### திருவாரூர் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம்
CMP.No.38/2025 in CC.No.84/2025

பிரியா.
– மனுதாரர்/புகார்தாரர்
– எதிர் –
1.கிளை மேலாளர்,
ஸ்ரீவிஜயா மோட்டார்ஸ்,
ஒகயா எலக்ட்ரிக் வாகன டீலர்,
எண்.89, நாகை பைபாஸ் ரோடு,
திருவாரூர் மற்றும் மூவர்.
– எதிர்மனுதாரர்கள்/ எதிர்தரப்பினர்கள்

1–ம் எதிர்மனுதாரர்/1–ம் எதிர்தரப்பினருக்கு எதிராக அறிவிக்கப்படும் பொது அறிவிப்பு

மேற்கண்ட வழக்கில் மனுதாரர் 1–ம் எதிர்மனுதாரரான தங்கள் மீதும் மற்றும் மூவர் மீது வாகனத்தில் ஏற்பட்ட பழுது தொடர்பாக இழப்பீடு கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் மேற்படி 1–ம் எதிர்மனுதாரரான கிளை மேலாளர், ஸ்ரீவிஜயா மோட்டார்ஸ், ஒகயா எலக்ட்ரிக் வாகன டீலர், எண்.89, நாகை மெயின் ரோடு, திருவாரூர் ஆகிய நீங்கள் மேற்படி வழக்கில் ஆஜராக வாய்தா 24.09.2025 அன்று வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணை இருந்தால் அன்று காலை 10.00 மணிக்கு சமூகம் ஆணையத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும்பட்சத்தில் தாங்கள் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டு மனுதாரர் கோரியபடி தீர்ப்பளிக்கப்படும் என்பதை அறியவும்.

**M.VENGADESH, B.Sc.,B.L.,**
வழக்கறிஞர், திருவாரூர்.

### மாண்புமிகு சார்ஆட்சியர் மற்றும் உட்கோட்ட நிர்வாக நடுவர் அவர்கள், முசிறி
எண்.5676/2025

வே.குணசேகரன்,
த/பெ.வேலுசாமி,
8/52, ராமநாயக்கன்பாளையம்,
மணப்புளி அஞ்சல்,
மோகனூர் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.
– மனுதாரர்
– எதிர் –
வட்டாட்சியர், முசிறி.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தந்தை “வேலுசாமி கண்டர்” என்பவர் கடந்த 12.10.2006–ம் தேதி அன்று செட்டித்தோட்டம், முசிறி என்ற முகவரியில் உள்ள அவரது வீட்டில் இறந்ததை எதிர்மனுதாரர் பதிவு செய்யக்கோரி மனுதாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் தங்களது ஆட்சேபனைகளை 15 தினங்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியரிடம் தெரிவித்துக் கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக உத்தரவாகிவிடும் என்பதை அறியவும்.

வே.குணசேகரன்,
மனுதாரர், மோகனூர்.

### சார் ஆட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர், குளித்தலை
மனு எண்.ஒ.மு.அ.7/2874/2025

க.ஆறுமுகம், த/பெ.கருப்பன்,
வடக்குத்தெரு, கரையாம் பட்டி,
கல்லடை கிராமம்,
குளித்தலை வட்டம்,
கரூர் மாவட்டம்.
– மனுதாரர்
– எதிர் –
வட்டாட்சியர், குளித்தலை.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி முகவரியில் வசித்து வரும் மனுதாரர் ஆறுமுகம் தனது தந்தை “கருப்பன்” என்பவர் மேற்கூறிய முகவரியில் உள்ள வீட்டில் 15.07.1977அன்று இறந்தார் என்று கூறி இறப்புச்சான்று வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் குளித்தலை சார் ஆட்சியர் அலுவலகத்தில் 7 தினங்களுக்குள் தெரிவித்து கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக உத்தரவாகிவிடும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

க.ஆறுமுகம்,
மனுதாரர், கரையாம்பட்டி.

### சார் ஆட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர், குளித்தலை
மனு எண்.ஒ.மு.அ.7/3250/2025

க.பூவாயி, க/பெ.கணேசன்,
அக்காண்டி மேடு,
கமுகூர் கிராமம்,
குளித்தலை வட்டம்,
கரூர் மாவட்டம்.
– மனுதாரர்
– எதிர் –
வட்டாட்சியர், குளித்தலை.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி முகவரியில் வசித்து வரும் மனுதாரர் பூவாயி தனது தந்தை “ராசு” என்பவர் மேற்கூறிய முகவரியில் உள்ள வீட்டில் 20.03.1985 அன்று இறந்தார் என்று கூறி இறப்புச்சான்று வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் குளித்தலை சார் ஆட்சியர் அலுவலகத்தில் 7 தினங்களுக்குள் தெரிவித்து கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக உத்தரவாகிவிடும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

க.பூவாயி,
மனுதாரர், அக்காண்டிமேடு.

### தமிழ்நாடு அரசு
### புதுக்கோட்டை மாநகராட்சி, புதுக்கோட்டை மாவட்டம்.

**தெரு விற்பனையாளர்கள் தேர்தல் அறிவிப்பு**
**STREET VENDORS-ELECTIONS NOTIFICATION**
**PUDUKOTTAI CORPORATION**
**அறிவிக்கை.**

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் புதுக்கோட்டை மாநகராட்சிப் பகுதியில் நடைபாதை வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் நடைபாதை விற்பனையை ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 2014–ன் துணை விதிகள் பிரிவு 38(1)–ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட தமிழ்நாடு நடைபாதை வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் நடைபாதை விற்பனையை ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 2016–ன் துணை விதிகள் 11–ன் கீழ் அமைக்கப்பட வேண்டிய நகர விற்பனைக் குழுவின் ஆறு எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் கீழ்கண்ட விபரப்படி தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர்.

| | | |
|---|---|---|
| 1. | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் | 01 |
| 2. | மகளிர் வகுப்பினர் | 01 |
| 3. | மாற்றுத் திறனாளிகள் வகுப்பினர் | 01 |
| 4. | சிறுபான்மையினர் வகுப்பினர் | 01 |
| 5. | பொது / பிற வகுப்பினர் | 02 |
| | கூடுதல் | 06 |

இம் மாநகராட்சியில் இதற்கான படிவம் D–யினை பெற்று பூர்த்தி செய்து 23.09.2025 ஆம் தேதி இம்மாநகராட்சி அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் விண்ணப்பிக்க வேண்டும். வேட்பாளர்கள் முன்வைப்பு தொகையாக ரூ.2000/– அலுவலக கருவூலத்தில் செலுத்தி ரசீது இணைத்து வேட்பு மனுக்கள் விண்ணப்பிக்க வேண்டும்.

| | |
|---|---|
| வேட்பு மனுக்கள் பெறப்படும் நாள் | 23.09.2025 |
| வேட்பு மனுக்கள் விலகல் பெறும் நாள் | 27.09.2025 |
| வேட்பாளர் இறுதி பட்டியல் வெளியிடும் நாள் | 27.09.2025 |
| தேர்தல் நடத்தும் நாள் | 29.09.2025 |
| தேர்தல் நடக்கும் இடம் | மாநகராட்சி அலுவலகம். |
| தேர்தல் நடக்கும் நேரம் | காலை 7.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை |
| வாக்குகள் எண்ணிக்கை | 6 மணி முதல் வாக்கு எண்ணிக்கை நடைபெறும். |

**ஆணையாளர்,**
**புதுக்கோட்டை மாநகராட்சி.**

“சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம்! சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்”

வெ.ஆ.எண்.104/செ.ம.தொ.அ/புதுக்கோட்டை. நாள்: 22.09.2025.



சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை சார்பில் செங்கல்பட்டு மாவட்டம் காலவாக்கத்தில் ரூ.21 கோடியே 85 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மாநில பயிற்சி கழகத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார். இதில் தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம், கூடுதல் தலைமைச்செயலாளர் தீரஜ்குமார், காவல்துறை தலைமை இயக்குநர் ஜி.வெங்கடராமன், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை இயக்குநர் சீமா அக்ரவால், காவலர் வீட்டு வசதி கழகத்தின் தலைவர் வினித்தேவ் வான்கேடே, அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் ரூ.3 கோடியே 94 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள், சமூகநீதி பள்ளி மாணவர் விடுதி கட்டிடம் ஆகியவற்றை திறந்து வைத்து ரூ.61 கோடியே 44 லட்சம் மதிப்பீட்டில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்படவுள்ள 8 சமூகநீதி விடுதி கட்டிடங்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார். இதில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் உடனிருந்தனர்.



சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து அதிகார அமைப்பின் 2-வது ஆணைய கூட்டத்தில் இந்தியாவிலேயே முதன்முறையாக பேருந்து, புறநகர் ரயில், மெட்ரோ ரயில் மற்றும் கேப்/ஆட்டோக்கள் போன்ற அனைத்து பொது போக்குவரத்துகளையும் இணைக்கும் வகையில் ஒரே கியூஆர் கோடு பயணச்சீட்டு மூலம் ஐ.ஓ.எஸ்., ஆண்ட்ராய்டு தளங்களில் செயல்படக்கூடிய சென்னை ஒன்று மொபைல் செயலியை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். இதில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் உடனிருந்தனர்.

### தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில்

# 13 பேருக்கு பணி நியமன ஆணை

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

சென்னை, செப். 23-

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாகத் தேர்வு செய்யப்பெற்ற 13 நபர்களுக்கு தமிழ் வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இதுதொடர்பாக தமிழ்நாடு அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது.,

தமிழ்நாடு அரசு அலுவலகங்களில் தமிழ் ஆட்சிமொழித் திட்டத்தை முழுமையாகவும் செம்மையாகவும் செயற்படுத்திடும் வகையில் 1958-ஆம் ஆண்டு ஆட்சிமொழிக்குழு உருவாக்கப்பட்டு, ஓர் ஆய்வுத் தனி அலுவலர் பணியிடம் உருவாக்கப்பட்டது. அதன்பின்னர் 1972 இல் இப்பணியிடத்துடன் சேர்த்து ஒன்பது ஆய்வுத் தனியலுவலர் பணியிடங்களாக உருவாக்கப்பட்டன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ் வளர்ச்சித் துறையின் அலுவலகக் கட்டமைப்பு சீரமைக்கப்பட்டு தமிழாய்வு அலுவலர் என்ற பதவிப் பெயரினை மாற்றி ஒருமுகமாக உதவி இயக்குநர் பணியிடங்கள் என 1998 ஆம் ஆண்டில் மாற்றியமைக்கப்பட்டது. இந்நிலையில், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க, தமிழ் வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் பணியிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக நிறைவு செய்திட அரசாணை வெளியிடப்பட்டது.

இளங்கலை மற்றும் முதுகலை தமிழிலக்கியம் பயின்ற மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக தேர்வு மற்றும் நேர்காணல் நடத்தப்பட்டு, தெரிவு செய்யப்பட்ட 13 நபர்களுக்கு உதவி இயக்குநர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் நேற்று வழங்கினார். தமிழ் இலக்கியக் கல்வி கற்றவர்கள் தமிழ் வளர்ச்சித் துறையின் உதவி இயக்குநர்களாகப் பணி வாய்ப்புப் பெற்றுள்ளது தமிழுக்கான நற்காலம் மட்டுமல்ல பொற்காலமுமாகும்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.



சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நேற்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கான ஆதி கலைக்கோல் பயிற்சி பட்டறை நிகழ்ச்சியையொட்டி அமைக்கப்பட்டிருந்த பாரம்பரிய இசைக்கருவிகள் கண்காட்சியை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டார். இதில் அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், மா.மதிவேந்தன், மேம்பாட்டுக்கழக தலைவர் நா.இளையராஜா, ஆதிதிராவிடர் நலத்துறை செயலாளர் க.லட்சுமிபிரியா, ஆணையர் த.ஆனந்த், மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி உடனிருந்தனர்.

# பல வளர்ச்சி திட்டங்கள் காரணமாக மக்கள் மனதில் முதல்வருக்கு இடம்

## அமைச்சர் காந்தி பெருமிதம்

காஞ்சீபுரம், செப். 23-

யாராலும் நமது முதல்வரை தொட்டுகூட பார்க்க முடியாது என்று அமைச்சர் காந்தி தெரிவித்துள்ளார். மேலும், பல வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்தியதன் காரணமாக முதல்வர் மு.க.ஸ்டாலின் மக்கள் மனதில் இடம் பிடித்துள்ளார் என்றும் அமைச்சர் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

காஞ்சீபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழகத்தை தலை குனிய விடமாட்டோம், ஓர் அணியில் தமிழ்நாடு தீர்மான விளக்கப் பொதுக்கூட்டம் காஞ்சீபுரம் சங்கர மடம் அருகே நடந்தது. கூட்டத்துக்கு மாவட்ட செயலாளர் சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். கூட்டத்தில் கைத்தறி துணி நூல் துறை அமைச்சர் காந்தி பேசியதாவது:-

யார் யாரோ(நடிகர் விஜய்) ரோட்டுக்கு வந்து என்னென்னவோ பேசுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு அமைச்சர்கள் பதில் சொல்லக்கூடாது என தலைமை எங்களுக்கு கட்டளையிட்டுள்ளது. ஆனால் யாராலும் நமது முதல்-அமைச்சரை தொட்டுகூட பார்க்க முடியாது. மக்கள் மத்தியில் அவர் செய்த வளர்ச்சி திட்டங்கள் காரணமாக எம்.ஜி.ஆருக்கும் அப்பாற்பட்ட அளவில் மக்களின் உள்ளத்தில் இடம் பிடித்துள்ளார். நாம் ஒற்றுமையுடன் இருந்தால் 2026-ம் ஆண்டு தேர்தலில் 200-க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெறுவோம். இவ்வாறு அவர் பேசினார். நடிகர் விஜய்யைதான் அமைச்சர் காந்தி, இதுபோல் பெயர் குறிப்பிடாமல் மறைமுக தாக்கி பேசினார்.



சென்னை கிண்டி அரசு பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற முன்னாள் மாணவர் சங்கத்தின் நூற்றாண்டு விழாவில் கல்லூரி முகப்பு குவிமாடத்தில் புனரமைக்கப்பட்ட கடிகாரம், புதியதாக உருவாக்கப்பட்டுள்ள புகழ் மண்டபம், சிறிய ஒளிப்பட அரங்கம் மற்றும் விருந்தினர் தங்கும் அறைகள் ஆகியவற்றை உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் திறந்து வைத்தார். இதில் செயலாளர் பொ.சங்கர், பதிவாளர் ஜெ.பிரகாஷ், முதல்வர் பி.ஹரிஹரன், முன்னாள் மாணவர்கள் சங்கத்தலைவர் எம்.வி.ரூப்சந்தர், செயலாளர் ஜெ.கனகராஜ், பொருளாளர் எம்.சரவணன் மற்றும் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### திரிபுரா மாநிலத்தில்

# மாதா திரிபுர சுந்தரி கோவிலில் பிரதமர் மோடி சாமி தரிசனம்

அகர்தலா, செப். 23-

மாதா திரிபுர சுந்தரி கோவிலில் பிரதமர் மோடி சாமி தரிசனம் செய்தார்.

திரிபுராவின் கோமதி மாவட்டத்தின் உதய்பூர் நகரில் அமைந்துள்ள பழமையான 51 சக்தி பீடங்களில் ஒன்று மாதா திரிபுர சுந்தரி கோவில் ஆகும். நவராத்திரி முதல் நாளான நேற்று பிரதமர் மோடி இந்தக் கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்தார்.

முன்னதாக, கோவில் வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆன்மிக கண்காட்சியை பிரதமர் மோடி பார்வையிட்டார்.



தொடர்ந்து, மாதா திரிபுர சுந்தரி கோவில் வளாகத்தின் வளர்ச்சிப் பணிகளை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.

புதிய நடைபாதைகள், புதுப்பிக்கப்பட்ட நுழைவாயில்கள், வடிகால் அமைப்பு, கடைகள், தியான அறை, விருந்தினர் தங்குமிடங்கள் ஆகியவை அடங்கிய மூன்று அடுக்கு கட்டடத்தை திறந்து வைத்தார்.



சென்னை கலைவாணர் அரங்க வளாகத்திலுள்ள மாநில செய்தி நிலைய கூட்டரங்கில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் நேற்று செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் மதுரை, திருநெல்வேலி, கோவை, தஞ்சாவூர் மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுடனான பணி ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், இயக்குநர் இரா.வைத்திநாதன், கூடுதல் இயக்குநர் ச.செல்வராஜ், கூடுதல் இயக்குநர் இரா.பாஸ்கரன் உள்ளனர்.



மகாளய அமாவாசையை முன்னிட்டு மதுரையின் அட்சய பாத்திரம் டிரஸ்ட் சார்பில் அதன் சேர்மன் நெல்லை பாலு ஏற்பாட்டில் மதுரை தெப்பக்குளம் முத்தீஸ்வரர் கோவில் அருகே தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத்தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஆர்.பி.உதயகுமார் குடும்பத்துடன் பங்கேற்று பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினார். அருகில் அம்மா சாரிட்டபிள் டிரஸ்ட் செயலாளர் பிரியதர்ஷினி, முன்னாள் எம்.எல்.ஏ. எஸ்.எஸ்.சரவணன் ஆகியோர் உள்ளனர்.